— Page — 417 —

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 14 இதழ்: 9	சுபகிருது௵ மார்கழி௴ டிசம்பர்-ஜனவரி 1962—63	வருட சந்தா ரூ. 3.00

ACC. NO.
18583.

அன்னக் குழியும் வைகையும் அழைத்தல்
சித்திர விளக்கம் 9. பக்கம் 390

உள்பொருள்

		பக்கம்
1.	தாயின் இதயம், தந்தையின் பௌருஷம் (திருப்புகழ்மணி) ...	385
2.	அன்னக்குழியும், வைகையும் அழைத்தது (கி. வா. ஜகந்நாதன்) ...	390
3.	குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ...	392
4.	ஔவைப் பிராட்டியார் (வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.) ...	397
5.	"சரவண ஜாதா நமோநம" விநாயகமலை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ...	400
6.	நவிலத் தகுமோ (கி. வா. ஜ.) ...	410
7.	உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) ...	413
8.	ஆநந்தோதயம் (ரஸபதி) ...	417
9.	பள்ளி எழுந்தருளாயே (மு பெருமாள்) ...	426
10.	OUR STRENGTH (*Thiruppugal Mani*) ...	431

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அநுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அநுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 15	சுபகிருது௵ மார்கழிமீ டிசம்பர்—ஜனவரி 1962-63	இதழ் 9

தாயின் இதயம், தந்தையின் பௌருஷம்

[திருப்புகழ்மணி]

கண்ணன் கையிலிருப்பது ஒரு குழல்தான். அது உலகம் பரந்த குழல். அந்தக் குழல் ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் இருக்கிறது. கண்ணனை யழைத்து, "கண்ணா! இக்குழலை வாசியென்றால் அவன் வாசிப்பான். ஜீவராசிகளுடைய காற்றுக் குழலை ஊதும் சக்தி யெல்லாம் சேர்த்துத் தன் குழலில் அடக்கி யிருக்கின்றான் கண்ணன். அவன் உள்ளே குழலூத ஆரம்பித்தால் உள்ளிருந்து அமுதம் சுரக்கும். சாகா வரம் பெறலாம்.

பிரம்மத்தினது கருணை நிறைந்த உருவமே கண்ணன். நீர்த்துளிகள் நிரம்பியுள்ள மேகமும், கடலும் கருமை நிறமாகத்தான் இருககின்றன. கருணை நிரம்பியுள்ள கண்ணனது நிறமும் கருமை. அவனது உதடோ செக்கச் செவேலென்று செம்பவளம் போலிருக்கிறதாம். உலகத்திலுள்ள அடியார்களுக்கு அன்பு மொழிகளையும் கீதோபதேசத்தையும்

இதனைச்செய் என்றே, எளியேற்(கு) உடல்தந்தான் ;
அதனை மறந்தேன் ; அறிவித்தல் செய்வானோ ?

கொடுத்துக் கொண்டிருக்கும் உதடு செம்மையாகத் தானிருக்கும். அவனுடைய முகமோ பூரண சந்திரனைப் போலுள்ளதாம். எல்லா ஜீவராசிகளையும் கவர்ந் திழுக்கக் கூடிய கருணை யொளி, குளுகுளு வென்று அந்த முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதாம். கண்ணனை நினைப்பவர் முகங்களி லெல்லாம், அந்த ஒளி பிரகாசிக்கும். ஆனால், அதைக் கவலையினாலும் கோபத்தினாலும் போக்கிக் கொள்ளக் கூடாது. முருகா வென்று சொல்லி விபூதி யணிந்து கொண்டால், முருக னுடைய கருணையொளி முகத்தில் பிரகாசிக்கும். அக்னி சுவரூபனாகிய சிவனை நினைத்தால், அவனுடைய மங்கள ஜோதி முகத்தில் ஒளிவீசும்.

முகத்திற்கு அழகைத் தருவது அன்பினுடைய விலாஸந்தான். உள்ளத்திலுள்ள அன்பு தான் முகத்தில் ஒளியா யிருந்து அழகைத் தருகிறது. அன்பே தெய்வத்தினுடைய சுவரூபம்.

வள்ளியினுடைய வடிவிலே கண்ணனுடைய அழகைப் பார்க்கலாம். கார்வண்ண முடையவள் வள்ளி, அவளுடைய உதடும் செம்மையாயிருக்கிறதாம். உள்ளத்திலுள்ள கனிவு வெளியே வரவேண்டுமானால் உதட்டின் மூலமாய்த்தான் வெளிவரும். உள்ளத்தில் கருணை நிரம்பி யிருந்தால், அந்தக் கருணை வெளிவர ஒரு வழி வேண்டாமா? அந்த வழிதான் உதடு. வள்ளியினுடைய புருவம் இந்திர வில்லைப் போலிருக் கிறதாம். ஆண்டவன் கொடுத்த வில் புருவமே. அதைச் சிறப்பாய் வைத்துக் கொள்ள வேண்டும்; எதற்காக? பரம புருஷனாகிய பகவான் பார்ப்பதற்காக. ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் தாய்மார்களின் புருவத் தில்தான் அடங்கி யிருக்கிறது. தாய்மார்கள் கோபத் தினால் புருவத்தை நெறித்தால், பதினாலுலகங்களும்

ஆணவ மாயம், அணு அணுவா நீங்கற்கு,
மாணவுறும் சாதனைகள், மன்னுவதும் என்றேயோ?

பஸ்பமாய் விடும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை யுபசரிப்பதற்காக, அன்புடன் வளைத்தால் அமுதம் சொரிந்து பதினுலுலகங்களையும் வளர்க்கும்.

நடராஜா ஆடிக்கொண்டே யிருந்தார். அவர் நடனத்தைப் பார்க்க அடியார் பலர் வந்தனர். அவர்களை வரவேற்பதற்காகப் புருவத்தை வளைத்தாராம். அப்படி வளைத்த புருவத்தைக் கண்டு மகிழ்ந்த அப்பர், "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும், இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்-மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்று பாடி விட்டார். யார் வந்தாலும் புருவத்தை யசைத்து வரவேற்க வேண்டும். அன்பு மயமான தன்மைக்கு ஏற்படும் விலாஸமே குனித்த புருவம். அதைக் கோபமயம் என்று ஏன் கொள்ளக் கூடாது? என்று கேட்கலாம். "கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பு" என்று சொல்வதால், அது அன்பு மயமான வளைவென்றே கொள்ளலாம்.

கீழே நெருப்பு, மேலே பனித்த சடையாம். கீழே யுள்ள நெருப்பின் தாபத்தைத் தன் பனித்த சடையி லிருந்து ஒழுகும் கருணை ப்ரவாகத்தால் தணிக்கிருராம். காமக் குரோதங்களை வளர்த்து வைத்திருக்கும் நானெனும் ஆணவமாகிய முயலகனைக் காலின் கீழிட்டு மிதித்து அடக்கி விடுகிருர். மேலே தூக்கிய மற்ருெரு காலால், எல்லா ஜீவராசிகளையும் அன்பினுல் ஆளுகிருர்.

பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண் டிருக்கும் பொழுது, எல்லா ஜீவராசிகளும் அர்த்த

பிறவி உலையில் புடமிட்டே, என்னை
நிறத்தங்கம் ஆக்க, நிமலனருள் எண்ணியதோ ?

நாரியாயிருக்கின்றனவாம். புருஷன் என்ற தத்துவம் உலகில் செயல் செய்கிறது. அதனுடைய கருணையே பெண். ஸ்த்ரீ புருஷர்களென்பதற்கு உலகத்தார் கொள்ளும் கருத்து சரியானதல்ல. உலகமே அர்த்த நாரீசுவர வடிவாய் (அதாவது) ஸ்த்ரீ புருஷரூப மாயமைந்தது. சக்தியாகிய ஜீவாத்துமாவை, பரம புருஷனாகிய இராமனுடன் சேர்த்து வைக்க வந்தவரே விசுவாமித்திரர். அவர் இராம லக்ஷ்மணர்களைக் காட்டுக்கழைத்துப் போனார். அங்கு ஒரு பாலைவனம். அதில் கொஞ்சமும் ஈ ர ப் ப சை யில்லையாம். அவ் வனத்திற்குத் தலைவி தாடகை. அவள் இராம லக்ஷ்மணர்களையே சாப்பிட நினைத்தாள். அவள் பெண்ணென்று அவள்மேல் அம்புவிட அஞ்சினார் இராமர். அதைக் கண்ட விசுவாமித்திரர், "இராமா! தயையற்றவள். தாய்மையின் பண்பாகிய அன்பு சற்றுமில்லாதவள். ஆதலால், இவளைத் தாயென்று பார்க்காதே. தாய் வடிவமான பெண்களைத்தான் கொல்லக் கூடாது. இவள் அனபற்ற பேய்வடிவம். இவளை யழிக்க வேண்டியது உலக க்ஷேமத்திற் காகத்தான். ஆதலால், இவளை யஞ்சாமல் கொல்" என்றார்.

ஆதிசங்கரர் தாயின் உருவத்தை 'வக்ஷோஜ பாரான்விதே" என்று பாராட்டி யுள்ளார். ஜீவராசி களை யெல்லாம் பாலூட்டி வளர்க்கும் தாயின் ஸ்தனம் மிக்க பாரமானதாம்.

அது, அன்பின் பளுவைச் சுமந்து கொண்டிருக் கிறதாம். அனைத்துக் குழந்தைகளைத் தன் பாலால் வளர்ப்பவ ரனைவரும் பராசக்தியின் அமிசமாவர். அனைத்துக் குழந்தைக ளெல்லாம் முருகனுடைய அமிசமே. கார்த்திகேயனுக்குப் பால் கொடுத்த

புழுக்கும் உடல்கரண போகம் புவனம்,
அழுக்கால் அழுக்கெடுக்கும் ஆட்சியெனல் ஓர்வேமோ ?

கார்த்திகை மாதர்களனைவரும், பார்வதியின் அமிசத்தைப் பெற்றனர். இராமனைக் கண்ட தாடகைக்கு அவனைக் குழந்தையாக நினைக்கும்படியான அன்பு சுரக்கவில்லை. திருமால் கார்த்திகைப் பெண்களை யழைத்து, முருகனுக்குப் பால் கொடுக்கும்படி கூறினர். முருகனைப் பார்த்தனர் கார்த்திகைப் பெண்கள். முருகா! என்றழைத்தனர்; இதயத்தில் சுரந்த அன்பு, பாலாய் வெளிவந்தது. அவனுக்கு அப்பாலைக் கொடுத்து தேஜோன்மயமான வடிவங்களைப் பெற்று, நித்திய சூரிகளானர்கள். அன்பு சுரக்கும் உள்ளங்களே, தாயினுடைய உள்ளங்கள். அத்தகைய உள்ளத்தைப் பெற்றவர் யாராயிருந்தாலும், அவர்கள் பரம புருஷனுகிய முருகனை யடைய வேண்டிய ஜெகன் மாதாவின் வடிவங்களாகவே கொள்ள வேண்டும். வேதம் பிரம்மத்தை சங்கர நாராயண சுவரூபமாகச் சொல்லிவிட்டது. யோகிகள் அதை எங்கும் காண்பர். பக்தியுள்ளவர்கள் அதை லக்ஷ்மீ நாரயணனுகவும், பார்வதீ பரமேசுவரனுகவும், ராதா கிருஷ்ணனுகவும், வள்ளீ முருகனுகவும் கண்டு மகிழ்வர்.

வள்ளியின் வனப்பை முருகன் மடலில் வரைந்த சப்த திருவுருவத்தைக் கீழே காணவும்.

'செண்பகாடவியினு மிதணினு முயர்
சந்தனுடவியினு முறை குறமகள்
செம்பொ னூபுர கமலமும் வளையணி—புதுவேயும்
இந்து வாண்முக வனசமும் ம்ருகமத
குங்கு மாசல யுகளமும் மதுரித
இந்தளாமருத வசனமும் முறுவலும்—அபிராம
இந்த்ர கோபமும் மரகத வடிவமும்
இந்த்ர சாபமும் இருகுழை யொடுபொரு
இந்த்ர நீலமும் மடலிடை எழுதிய—பெருமாளே!'

அன்னக் குழியும் வைகையும் அழைத்தது.

[கி. வா. ஜகந்நாதன்]

திருமணத்தில் சமைத்திருந்த உணவுகளையும் சமைக்காமல் வைத்திருந்த பண்டங்களையும் விழுங்கியும் பசிதீராமல் வருந்திய குண்டோதரனையும், இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்ற மீனாட்சியம்மையையும் கண்டு தன் உள்ளே நகைத்த இறைவன், அன்னபூரணியை திருவுள்ளத்தில் எண்ணினான். உடனே அந்தப் பெருமாட்டி அங்கே எழுந்தருளினாள். அங்கே நான்கு குழிகளில் தயிரும் அன்னமும் கலந்து பொங்கி வந்தன.

அதைக் கண்ட இறைவன், "உன் பசிதணிய இதனைப் பருகு" என்று குண்டோதரனைப் பணித்தான். உடனே அவன் அன்னக் குழியிற் புகுந்து எடுத்தெடுத்துத் தயிரன்னத்தை விழுங்கினான். அதனால் அவனிடமிருந்த பசி, இறைவன்பால் பக்தி யுடையவர்களின் பழவினைத் தொடர்பைப் போல மறைந்தது.

தன் வயிறு கொள்வதற்கு மேலும் உண்ட குண்டோதரன் மலைபோலக் கீழே புரண்டான். அவனுக்கு நீர் வேட்கை மிகுதியாயிற்று. எழுந்துபோய் வாவி, ஓடை, குளம் ஆகியவற்றில் உள்ள நீரை வற்றக் குடித்தும், தாகம் அடங்காமல் கிணறுகளில் உள்ள நீரையும் குடித்தான். அப்போதும் நீர் வேட்கை தணியாமல் தவித்தான். அப்போது கங்காதரனாகிய இறைவன் உள்ளம் இரங்கித் தன் முடிமீதிருந்த கங்கையை நோக்கி, "நீ இந்த மதுரையின் மதிற்புறத்தே ஓர் ஆறாக வருவாயாக!" என்று பணித்தான்.

எண்ணிப் படித்தே, எழுத்துலகிற் சேவைசெயும்
புண்ணியர்கள், தெய்வப் பொலிவுடையர் ஆவாரே.

அது கேட்ட கங்கை, "எம்பெருமானே, அன்று பகீதரனுக்காக அவனுடைய முன்னோர்கள் உய்ய நீ போக வேண்டும் என்று கட்டளையிட்டாய். இன்றும் ஓர் ஆறாக வரவேண்டுமென்று பணிக்கின்றாய். அடியேன் ஒரு விண்ணப்பஞ் செய்து கொள்கிறேன். என்னைக் கண்டவர்கள், கையால் பரிசித்தவர்கள், நீராடினவர்கள், யாவர்க்கும் மெய்ஞ்ஞானமும் பிறகு வீடுபேறும் கொடுத்தருள வேண்டும்" என்று வேண்டினாள். இறைவன் அவ்வாறே வரம் கொடுக்க, கங்கை வேகமான நதியாக வரலானாள்.

வரும் வழியிலுள்ள மரங்களை வேர்பறிய வீழச் செய்து அடித்துக் கொண்டு வந்தது அந்த ஆறு. மான்களையும் யானைகளையும் வேடர்களையும் இழுத்து வந்தது. கல்லாதவர்கள் இயற்றிய கவியைப் போல் கலங்கி, பிறகு கேள்வியிற் சிறந்தவர்களுடைய கவியைப் போலப் பல துறைகளை உடையதாய், போகின்ற இடமெல்லாம் ஆழத்துடன் தெளிவு பெற்று, எல்லோரும் விரும்பி நலம் பெறும்படி சென்றது.

"கல்லார் கவிபோற் கலங்கிக் கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான்றுறை தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருள்ஆழ்ந்து தெளிந்து தேயத்து
எல்லாரும் வீழ்ந்து பயன்கொள்ள இறுத்த தன்றே."

இவ்வாறு வந்த நதியைக் கண்டு இறைவன், குண்டோதரனை அவ்வாற்றுக்கு அனுப்பித் தாகம் தீரும்படிப் பணித்தான். அவன் மிக வேகமாக ஆற்றினிடையே புக்கு இரண்டு கைகளையும் விரித்து அணைபோட்டாற் போல வைத்துக் கொண்டு, வாயைத் திறந்து நீரைப்பருகினான். இறைவனுடைய சடையினின்றும் இறங்கி ஓடிய ஆற்று நீரைத் தன் விடாய்ப் போக உண்ட குண்டோதரன், இறைவனிடம் சென்று பணிந்து

பக்தியுடன் என்றும் திருப்புகழைப் பாடுகின்ற
உத்தமரை நோக்கி உவகைகொளும் தெய்வமரோ.

பலவகையாகத் துதித்தான். அவனுக்குப் பூத கணங்களின் தலைவனாகும் உரிமையை இறைவன் அளித்தான்.

இறைவனுடைய சடையினின்றும் இறங்கி வந்தமையால் அந்த ஆற்றுக்குச் சிவ கங்கை என்ற பெயர் உண்டாயிற்று; சிவனடியார்களுக்குச் சிவஞானம் தருதலால் சிவஞான தீர்த்தம் என்ற பெயரையும் பெற்றது; வேகமாக வந்ததனால் வேகவதி என்ற பெயரும் அமைந்தது; கிருதமாலை என்ற பெயரும் அதற்கு வழங்கும். யாவரும் வைகை என்று வழங்கலாயினர்.

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

மஞ்சுள பதயே நமோநம:

மஞ்சுளம் - அழகினுக்கு; பதயே - தலைவனுக்கு;
நமோநம: - போற்றி! போற்றி!

அழகு:

மக்கள் மனத்தைக் கவரும் இயல்பே அழகு என்னலாம். இது சில பொருள்களைச் சார்ந்து நின்று காண்போர்க்கு இன்பம் தரும். இது இயற்கை எனவும், செயற்கை எனவும் இருவகைப்படும். இறைவனைப் போன்று தானே தோன்றித் தழைப்பது இயற்கை அழகு. வண்ணமோ, பிறவோ சேர்த்து ஆடை, அணிகலன் முதலியவற்றால் விளங்குவது செயற்கை அழகு. எத்தனைதான் ஓவியக்காரன் கைத்திறன் அனைத்தும் காட்டி ஒரு பூவிற்கு நிறம் ஊட்டினாலும், தானே ஒரு கொடியில் பூத்துக் குலுங்கும் புது மலரின் நிறம் வராது. இதனாலேதான், இயற்கை எழிலைக் 'கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்று நாவாரப் பாடுகின்றார் நக்கீரர். இவ்வித

வணங்கத் தலைவைத்து, வாழ்த்துதற்கு வாய்தான்
இணங்கும் உளத்தில், இருக்கின்றான் எம்மானே.

இயற்கை அழகை வானுற வளர்ந்த மரச்சோலைகளிலும், தாமரை மலர்ந்த தடாகங்களிலும், நீலத்திரைக்கடல், நீலநிற வானம், கள்ளங்கபடமற்ற கனிவாய்க் குழந்தை முதலியவற்றில் கண்டு மகிழலாம். எனினும், அழகு விஞ்சித் தோன்றுதற்கு இளமையும் வேண்டும். அவ்விளமை விரைவிலே மாறுந் தன்மையை யுடையது. அதனால் மாறும் இயல்புள்ள இளமையைச் சார்ந்து நிற்கும் அழகும் நிலைத்திராது. நிலையாமை யுடைய அழகு முழுஅழகு என்னல் முடியுமா ?

முழு அழகு :

முழு அழகு என்பது, எப்போதும் எங்கும் எவ்வகையிலும் குறைதலின்றிப் பொலிவோடு விளங்கும். அதில், மாறா இளமையும் மலிந்திருக்கும். இவ்வாறு விளங்குவதால் அது தெய்வத்தன்மையு முடையது எனனலாம். புறத்தில் மட்டும் அழகிருந்தால் போதுமா? அக அழகும் கொண்டிருத்தல் அவசியம் ; இதனால் தான், 'கோலஞ் சிறந்தபடியே நல்லகுணமும் ' சிறந்திருத்தல் வேண்டும். அதற்கேற்ற அறிவும், ஆற்றலும், ஆண்மையும் இருந்தால்தான் அழகு முழுமையாக விளங்கக் கூடும்.

"பரம ஞானமும் அழகும் ஆண்மையு முடைய பெருமாளே"

முழு அழகன் :

இவ்வித நிலைகள் எல்லாம் ஒரு சேரக் காட்சி யளிக்க நிற்கும் பெருமான்தான் முருகன் எனப்படுகிறான். அவனது திருவடிகளையும் தண்டைகளையும் காண்கிறார் அருணகிரியார். தேவர் முடி தடவித் தடவிச் சிவந்த ரட்சைதரு சிற்றடிகளையும், நாத தத்துவச் சின்னமான தண்டைகளையும், அவற்றின் அழகு விளங்கி நிற்பதையும் கண்டு,

---

ஆவதுபோல் தோன்றி, அழியும் உலகிதனில்,
தேவ!நினைத் தேடித், திகைக்கின்ற(து) என்னுள்ளமே,

"சிவந்த காலும் தண்டையும் அழகிய பெருமாளே" என்றார். பிறகு தாமரை போலும் கருணை வழியும் கந்தன் முகத்தின் அழகைக் கண்டு, 'ஆ! இதன் வண்ணம் எழுத அரியது' என்று எண்ணி வியக்கிறார். 'இலகு கமல முகமும் அழகும் எழுத அரிய பெருமாளே' என்கிறார். இப்பிரானது சீர் கொண்ட தெய்வ வதனங்களும், திருமணி நுதலும், வயிர மணி அழுத்திய சுட்டி முதலிய அணிகளும், பன்னிரு விழிகளும், பன்னிரு காதுகளும், குதம்பை அணிகளும், அம் பொன் நூலும், உடைமணி, அரைவடம், முத்துச் சதங்கை, அழகிய மயில், திருக்கைவேல் ஆகிய எல்லாம் அழகுறப் பொலியும் அற்புதக் காட்சியைக் கண்ணாரக் காணும் பேறு பெற்ற பின் அருணகிரியார், மேலும் "முழுதுமழகிய குமர!" என்று வியப்பும் விம்மிதமும் கொள்கிறார். படியுங்கள்:

"எழுதரிய அறுமுகமும் அணிநுதலும் வயிரமிடை
இட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களும்
[துங்க நீள்பன்
னிருகருணை விழிமலரும் இலகுபதி னிருகுழையும்
ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களும்
[செம்பொன் நூலும்
மொழிபுகழும் உடைமணியும் அரைவடமு மடியிணையும்
முத்தச் சதங்கையும் சித்ரச் சிகண்டியும்
—செங்கை வேலும்,
முழுது மழகிய குமர" (திருப்புகழ்)

இவ்வித அழகிய தெய்வத்தைச் சென்று தொழ

"நாலாயிரங்கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்றும் வருந்துகிறார்.

அன்புநீர் பாய்ச்ச, அருள்மலரும்; மாசற்ற
அன்புமனம் கண்டசிவம், ஆன்மாவை நோக்கும்மே.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

மாம்பழக்கவி வேண்டும் வரம்:

மாம்பழக் கவிச் சிங்க நாவலர் [illegible] பெற்றவர். அவர் அகமுக நாட்டத்தில் அறுமுகன் அழகினைத் தரிசித்தார். அவ்வித அழகைக் கண்டு புகழ்ந்து தொழ வரம் வேண்டுகிருர்.

"பற்பல கதிர்த்திர ளெனப்பரு மணிச்சுடர்
பரப்பு மகுடத்தின் அழகும்
பத்தர் மகிழக்கருணை வைத்தினிது பார்க்கின்ற
பத்ம நயனத்தி னழகும்
உற்பன மறைப்பொருளை நற்றமிழ் முனிக்குமுன்
உணர்த்துசெவ் வாயி னழகும்
ஒழுகமிர்த நயகிரண முழுமதியும் மணநாறும்
ஓராறு வதன அழகும்
பொற்பரு வதத்தினை நிகர்த்துவளர் பன்னிரு
புயத்தி னழகும் துலங்கிப்
பொங்குவெண் ணீற்றினழ கும்கண்டு தமியேன்
புகழ்ந்து தொழ வரமுதவுவாய்
சிற்பர சதானந்த நிஷ்கள நிராலம்ப
திவ்விய சுக பரிபூரண !
செயமிகுத் துலவுதிரு மயில்வயப் பரியில்வரு
சிவகிரிக் குமர தேவே.

அன்பர்களைக் கவர்ந்த அழகன்:

"கமல மடமங்கை வதனத்தழகு காண்பள்
கரியமுகில் வண்ணனும் செங்கண்ணழகு காண்பன்
கலைவாணியும் சொல்லழகு காண்பள் முக்கண்
[தாதையும்

நோக்கும் சிவநோக்கில், நுட்ப அருள்கனல்தான்
ஊக்கும் எறும்புபோல், ஊரும் உடலிதுவே.

விமலமுறு சொற்பொருளி னழகுகாண் பன்விதி
வியன்கரத் தழகு காண்பன்
வீறுதோ ளழகிந்தி ராணி காண்பள் உம்பர்
வேந்துவே லழகு காண்பன்
நிமலமன அடியர்அடி யழகு காண்பர் கௌரி
நின்றுபின் னழகு காண்பள்
நின்னொத்த ஆதித்தன் வடிவழகு காண்பன் ஒரு
நீயு மவருடன் குழுமியே
அமலமென் நகைஅழகு காணலாம் சமயமீது
அம்புலீ யாட வாவே "

[குமரக் குழந்தைக்கு நிலாக்காட்டிய தாய், வெண் நிலவை முருகன் தண்ணழகு காணவருமாறு அழைக்கிருள்]

திருமகள் திருமுருகன் திருமுக எழில் காண்பாள். கார்முகில் வண்ணன் செங்கண்ணழகு கண்டு களிக்கிருன். கலைமகள் கந்தனின் சொல்லழகைச் சுவைக்கிருள். முக்கண் மூர்த்தியாம் தந்தை முருகமூர்த்தியின் பொன் மொழிப் பொருளைப் போற்றுகிருர். படைக்குங் கடவுள் பரமன் கைவண்ணங் கண்டு பணிகிருன். தானவரைத் தடிந்து, தன்தாலிக்கு வேலி கோலிய சண்முகன் திண்ணிய தோளழகு இந்திராணி கண்டு துதிக்கிருள். குலிசவேல் கோமானும் குமரன் வேலழகு கண்டு வியக்கிருன். அமலமாகிய சிந்தையடியவர் அண்ணலின திருவடி யழகில் திளைக்கின்றனர். கண்ணேறு படுமோ எனக்கருதி கவுரி யன்னையும் நின்று பின்னழகு கண்டு பெருமிதங் கொள்கிருள். ஏ! சந்திரனே! உன்னை ஒத்த உதய சூரியனும் உமைபாலன் உருவழகு கண்டு உவகை பூக்கிருன். ஆதலின், நீயும் அவர்களுடன் கூடியே பால குமரனின பல்லழகு காணலாம். இதுவே தக்க

எங்குமுள விண்ணில், மவுனம் இயல்பாகத்
தங்குகின்ற அற்புதத்தைத், தாமறிவர் தக்கோரே.

சமயம் ! அம்புலீ ! ஆறு முகனுடன் ஆடவருக ! வருக ! என அழைக்கும் அழகையும் அநுபவியுங்கள்.

தொகுப்பு :—

அழியா இளமையும் பூரண அறிவும் பேர் ஆண்மையும் உடைய இயற்கை யழகே முழு அழகு. 'மணங்கமழ் தெய் வத்து இளநலங் காட்டி'; 'என்றும் இளையாய் அழகியாய்' என்று போற்றப் பெறும் அழகு வடிவே முருக மூர்த்தியாம். அவனே அழகினால் மாரன் (மன்மதனை)யும் பழிக்கும் குமாரன். அழகு ராமனுக்குத் திருமருகன். அறிவழகனுக்கு (சோமசுந்தர னுக்கு) அருமை மகன் என்றால், அவனே அழகின் தலைவன் (மஞ்சுளபதி) என்பதில் தவறில்லையே ! அதனால் நமது பாம்ப னடிகள் அழகுத் தலைவனுக்குப் போற்றி என்ற பொருளில், " மஞ்சுள பதயே நமோநம " என்கிறார்.

---

8. ஔவைப் பிராட்டியார்.

(தணிகைமணி வ, சு. செங்கல்வராய பிள்ளை- M. A.,)

" ஔவையார்க் கடியேன் "

1. பிறப்பு

தவச் செல்வம் நிறைந்த ஆதி எனப் பெயர் கொண்ட அம்மையாரும் பகவன் என்பவரும் திருமணம் செய்துகொண்டு ஊர் ஊராகச் சஞ்சரிக்கலாயினர். வழியில் பலதலங்களைத் தரிசித்து ஆங்காங்கு முருகவேளை வழிபட்டுச் சோழநாடு அடைந்தனர். அந்நாட்டுத் தலைநகராய உறையூரில் வந்து தங்கி னர். அங்கு, ஆதி அம்மையார் தமிழ்நாடு செய்த தவங்கள் திரண்டெழுந்தாற் போன்ற ஒரு பெண்மகவை ஈன்றார். அப் போது வானவர் மலர்மாரி சொரிந்தனர். இலக்குமி போன்ற

சித்தம் தெளிந்தார்க்குச், சிற்சபையில் ஆடுகின்ற
அத்தன் புலனாவன் என்கின்றார், ஆன்றோரே.

அந்தக் குழந்தையைக் கண்ட தாய் அதனுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தனள். ஆனால் தன் கணவனுடன் தான் ஒப்புக் கொண்டிருந்த ஏற்பாட்டின்படி அக்குழந்தையை அங்குத் தனியே விட்டுவிட்டு இருவரும் பிரியவேண்டி யிருந்தது. பகவனார் அம்மையாரை நோக்கி குழந்தையைத் தனியே விட்டுப் புறப்படு என்றார். ஆதி அம்மையார் அதைக் கேட்டு மனங் கலங்கினர். அப்போது அக்குழந்தை அன்னையின் முகத்தை நோக்கித் தலை அசைத்து,

" இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ "

என்னும் தீஞ்சொற் கவிதையைத் தனது குமுத வாயாற் பாடிற்று. இப் பாடலைக் கேட்ட தந்தையும் தாயும், " உன்னைக் கந்தவேள் காக்க " என்று கூறி அக்குழந்தையைத் தனியே விட்டுச் சென்றனர்.

2. வளர்ப்பும் பாடற்றிறமும்

தனி நின்ற குழந்தையைப் பாண ஜாதியரின் தலைவன் கண்டு, எடுத்துச் சீராட்டிப் பாராட்டிச் செந்தமிழ் வளர வளர்த்தனன். முருகவேளின் திருவருளால், அக்குழந்தை இவள் கலைவாணி தானோ என்று யாவரும் வியக்கும் வண்ணம் கவி பாடும் திறம்பெற்று, " ஆத்திச் சூடி," " கொன்றை வேந்தன் "—என்னும் தமிழுக்கு அணிகலமான நீதிநூல்களை அறிஞர்கள் வியந்து போற்றப் பாடிற்று. பின்னர் முருகவேள் அருள் முன்னிற்க " நல்வழி " " மூதுரை " எனப் பெயரிய நீதி நூல்களை உலகம் போற்ற ஈந்தது.

தாய்கையில் சேய்போலத், தாவுகின்ற நல்லுயிரை,
வாய்மைச் சிவம்குருவாய், வரவேற்றல் காணீரோ ?

3. பயணம்

வயது ஏறியபின் முருகவேளின் தலங்களைத் தரிசிக்க விரும்பிப் பிராட்டியார் பாணர் கோமானையும் உறையூரையும் விட்டுப் புறப்பட்டுக், காவிரியின் இருபாலுமுள்ள தலங்கள் பலவற்றையும் தரிசித்து, நடுநாட்டிலுள்ள திருக்கோவலூரை அடைந்தனர். அருட்கவி பாடும் பிராட்டியார் தமது ஊருக்கு வந்துள்ளார் என அறிந்த அவ்வூர் வேந்தன், பிராட்டியாருக்குப் பாத பூஜை முதலியன செய்து நல்விருந் தளித்தனன்.

" என்னுடைய பெற்ருேர் செய்த தவப் பயனே! தாங்கள் எழுந்தருளியது" என்று கூறிப் பிராட்டியாரை வணங்கினன். பிராட்டியாரும் " புரவல வாழி !" என ஆசி கூறினர். பின்னர் " அரச ! யான் முருகவேளின் தலங்களைத் தரிசிக்கும் அவாவுடன் புறப்பட்டேன் ; போதற்கு விடை கொடு ; திரும்புங்கால் உன்னைச் சந்திப்பேன்" எனக் கூறினர். அரசனும் " தங்கள் மனப்படி ஆகுக !" எனக் கூறினன். தேவியாரும் நடுநாட்டிலுள்ள தலங்களைத் தரிசித்துப் பின்னர் பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலுமுள்ள முருகவேளின் தலங்களைத் தரிசித்தனர்.

4. ஔவையும் அதிகமானும்

அதன்பின் மலை நாட்டின் தலைநகராகிய கொடுங்கோளூரை அடைந்தனர். அங்கு ஆண்டு கொண்டிருந்த அதிகன் என்னும் அரசன, " பைந்தமிழ் நாடு செய்த பாக்கியமோ ! எனது முன்னோர் பலகாலம் செய்த தவப்பயனோ ! இங்குப் பெருமாட்டி எழுந்தருளியது " என முகமன் கூறி நல்விருந்தளித்து, நீண்ட ஆயுளைத் தரவல்ல அமிர்தமூறும் நெல்லிக் கனி ஒன்றை ஈந்து இதைக் " கொண்டருள்க ! உண்டருளுக !" என வேண்டினன்.

கண்டு கலக்க அருளே வழிகாட்டும் ;
பண்டுள்ள நூற்களிதைப், பறையறைதல் கேளீரோ ?

அக்கனியை உண்ட ஔவையார், "அதியர் கோமானே! நெல்லிக்கனி எமக்கு ஈந்தாய்! ஆதலால் நீ நீலமணி மிடற்றுச் சிவபிரான் போல மன்னுக" என்னும் கருத்தைக் கொண்ட *"வலம்படு வாய்வாள்" எனத் தொடங்கும் பாடலில்,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே !............"

"பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி..........
சாதல் நீங்க எமக்கீந்தனையே :!

என அதியனைப் புகழ்ந்தனர். *புறநானூறு 91. (தொடரும்)

விநாயகமலை

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சரவண ஜாதா நமோநம கருணையதீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம -
தருணக தீரா நமோநம நிருபம வீரா நமோநம
சமதள வூரா நமோநம ஜகதீச;
பரம சொரூப நமோநம சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி -
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்;
இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற வானவ
ரெவர்களு மீடேற ஏழ்கடல் முறையோவென் -
றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா விசாசர
ரிகல்கெட மாவேக நீடயில் விடுவோனே!
மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண -
மயிலுறை வாழ்வே விநாயக மலையுறை வேலா மகீதர
வனசர ராதார மாகிய பெருமானே!

(பதவுரை.) (இரவியும்...நீடயில் விடுவோனே !)

இரவியும் ஆகாச பூமியும் விரவிய தூள் ஏற - பரவி எழுந்த புழுதிப் படலம், பரிதி மண்டலம், விண்மண்டலம், நிலமண்டலம் முழுதும் பரவவும் ;

வானவர் எவர்களும் ஈடு ஏற - இமையவர் யாவரும் இழந்த மதிப்பை எய்தவும் ;

ஏழ் கடல் முறையோ என்று இடர்பட - ஏழு கடல்களும், (வேக வெப்பம் தாங்க முடியாமல், இது தகுமோ, இது) முறையோ என்று கனற்றிக் குழம்பிக் கதறவும் ;

மா மேரு பூதரம் இடி படவேதான் - புனித மேருமலை பொடியாகிப் போகவும் ;

('இடிபடவே தான்' என்பதில், தான - அசைநிலை.)

நிசாசரர் இகல் கெட-அவுணர்களின் பகைமை அழியவும்;

மாவேக நீடு அயில் விடுவோனே - வேகம் மிகுந்த. வேல் படையை, (எடுத்து ஊடுருவ) ஏவியவனே !;

(மரகத......மயிலுறை வாழ்வே !)

மரகத ஆகார ஆயனும் - பசுமை நிறத்துடன் இடையரில் வளர்ந்த பரந்தாமனும் ;

இரணிய ஆகார வேதனும் - பொன்னிற மேனியுடன், (நாத மயமான) வேதம் ஓதும் நான்முகனும் :

வசு எனும் ஆகார ஈசனும் அடிபேண - நெருப்பு எனும் (செந்) நிறத் திருமேனியுள உருத்திரனும் திருவடிகளை வணங்கித் துதித்து வழிபட ;

மயில் உறை வாழ்வே - மயில்மேல் அமர்ந்த வாழ்வு மயம் ஆனவனே !;

(விநாயக.........பெருமாளே !)

விநாயக மலையுறை வேலா - விநாயக மலையில் வீற்றிருக்கும் ஞான சக்திதரா !;

எச்சரிக்கை யாகி, இதயம் சிதையாதேல்,
உச்சரிக்கும் ஓம்ஓம், உயிர்ப்பில் ஒலிக்கின்றதுவே.

மகீதர - தரணியை என்றும் தாங்குபவனே !;

வனசரர் ஆதாரம் ஆகிய பெருமாளே - காட்டு வாசிகளான வேடர்களின் வாழ்விற்குக் காரணமான பெருமையிற் சிறந்த பெரியோனே !;

(சரவண.........அருள் தாராய்.)

சரவண ஜாதா நம ஓம் நம - (உயர்ந்த) சரவணத்தில் உதித்தவனே ! அடைக்கலம் ; ஓம் (உருவே, உமக்கே) அடைக்கலம் ;

கருணை அதீதா நமோ நம - அளவிலாத கருணை அமைந்தவனே! அடைக்கலம், ஓம் (உளமே, உமக்கே) அடைக்கலம்;

சததள பாதா நமோ நம - (நுண்ணிய) இதழ் நூறு கொண்ட தெய்வக் கமலத் திருவடிகளை யுடையவனே !; அடைக்கலம், ஓம் (உயிர்ப்பே ! உமக்கே) அடைக்கலம் ;

அபிராம தருண கதீரா நமோ நம - அழகும் இளமையும் ஒளியும் ஆனவனே ! அடைக்கலம், ஓம் (உணர்வே ! உமக்கே) அடைக்கலம் ;

நிர் உபம வீரா நமோ நம - ஒப்பாரும் (மிக்காரும்) இல்லாத (உயர்) வீரா ! அடைக்கலம், ஓம் (உயிரே ! உமக்கே) அடைக்கலம் ;

சம தள ஊரா நமோ நம - (திருப்) போரூரில் எழுந்தருளிய தெய்வமே ! அடைக்கலம், ஓம் (வாழ்வே ! உமக்கே) அடைக்கலம் ;

ஜகத் ஈச பரம சொரூபா நமோநம - உலகமாகிய திருவையுடையவனே ! (மேதகு) ஞான மேனியனே ! அடைக்கலம், ஓம் (சொரூபமே ! உமக்கே) அடைக்கலம் ;

சுரர் பதி பூபா நமோநம - அமரர் தலைவனான இந்திரனுக்கு வேந்தே! அடைக்கலம், ஓம் (ஒளியே! உமக்கே) அடைக்கலம் ;

ஒளியும் இருளும், உயிர்க்கின்ற யாவும்,
அளியுடைய அத்தன் அருள்மலர்ச்சி என்பாரே.

பரிமள நீபா நமோநம - மணம் கமழ் கடப்பமலர் மாலை யனே ! அடைக்கலம், ஓம் (ஒலியே / உமக்கே) அடைக்கலம் ;

உமை காளி பகவதி பாலா நமோநம - (பசுமை நிறப்) பார்வதியார், (கருநிறமான) காளிதேவி, (செந்நிறமான) பகவதி (முதலிய சத்திகள் அருளிய) பாலனே ! அடைக்கலம், ஓம் (முதலே, உமக்கே) அடைக்கலம் ;

இகபர மூலா நமோநம - இம்மை வீடுபேறுகளின் (கம் பீரப் பயனும்) காரணனே! அடைக்கலம், ஓம் (செல்வமே! உமக்கே) அடைக்கலம் ;

பவுருஷ சீலா நமோநம - வீர ஆவேசமும், வைதிக ஒழுக்கமும் உடையவனே! அடைக்கலம்! ஓம் (தெய்வமே ! உமக்கே) அடைக்கலம் ;

அருள் தாராய் - (அடியேற்கு உமது) அருளை அளித் தருளும், (எ - று).

விரிவுரை

மருளும் மனம், இருளடையும். அதன் பின், வாக்கின் வாய்மை வறண்டுவிடும் ; பொய்ம்மை, செயல்களில் பொங்கி வரும். இவைகளால், பாழ்த்த கர்மங்கள் தோன்றிப் பல்லிளிக் கும். முன்பிறப்பில் செய்தவை, பின்னைய பிறப்பில் வந்து பீடழிக்கும்.

இப்பிறப்பில் செய்வினைகள், அடுத்த பிறப்பில் தப்பாமல் வந்து வந்து தாக்கும். அதிகரித்த வினைகளை அனுபவிக்க, இறப்பும் பிறப்பும் வருவது இயற்கை.

எப்பிறப்பும் வேண்டாம் என்று, இமையவர் எண்ணினர்; மரணத்தை, அவுணர் மறுத்தனர். இஃது, இயற்கையை மறுக்கும் எதிர்ப்பு நடை.

நினைத்தவை நிறைவேற, அவுணரும் தேவரும் அருந்தவம் செய்தனர். அதன் பயனாக, அவைதிக அசுரர், இறவா வரம்

தோன்றும் உலகனைத்தும், தோன்றிய(து) எங்கிருந்து ?
ஊன்றி இதனை, உணராரும் மாநுடரோ ?

எய்தினர். வைதிக வானோர், பிறவா வரத்தைப் பெற்றனர். கோணை மனம் கொண்டோர், இறவாநிலை எய்தினரேல், வினையும் விளைவுகள் விபரீதம் ஆகும். மதிகெட்ட அவுணர்களின் மனம், மருண்டு இருண்டது. வாய் நாறும் உணவுகளால், வார்த்தைகள் நாறல் ஆயின. எங்கும் அக்கிரமங்கள். எங்கும் அழிவுகள். நல்லோர் உள்ளம் நடுங்கும் செயல்கள்; வீணர் அவுணர் தீவினைகள், பார்முழும் இப்படிப் பரவியது. உம்பர் உலகிலும் ஊடுருவியது. பாதலம் எங்கும் படர்ந்தது.

விண்ணவர் செய்வினை, போகமே ஆகிப் பொங்கியது. அமர வுலகுடன் அமையாமல், அவை மண்ணிலும் இறங்கி மலிந்தன. புனித குரு குடும்பத்தில், சந்திரன் புகுந்தான். இந்திரன் அகலிகையை எண்ணினான். மண்ணில் ஊர்வசி, பலரை மணந்தாள். வரலாறுகள் இப்படி வளர்ந்தன. இறப்பதே இல்லை. எவரும் பிறப்பதும் இல்லை. பிறவா நிலையரை, இறவா நிலையினர் எதிர்த்தனர். வாதும் சூதும் வளர்ந்தன; இருதிறத்தரும் செய்த வினைகள், குன்றுகள் போலாகி எங்கும் குவிந்தன. அவைகளால், பருதிமண்டலம், விண்மண்டலம், நிலவுலகம் முழுதும் பழுதடைந்தன. கடலிலும் மலையிலும், அசத்வம் கலந்தது. நல்லோர் இடத்திலும், இதய உறவு இறந்தது; உதட்டு உறவு சிறந்தது. தடுமாறி அழுதது தர்ம தேவதை.

விநாயக மலைமேல் ஏறிய விசாகா! உலக நிலையை உணர்ந்தனை; திருவுளம் இரங்கினை; நுட்ப ஞான சக்தியை நோக்கினை; உடனே வீறு கொண்டு புறப்பட்டது வேல். அதன் வேகத்தில், விண்ணில், மண்ணில், பரிதி மண்டலத்தில், புழுதி படர்ந்தது. அதன் தரிசனத்தால், தேவர்கள் அறிவு தெளிவு பெற்றது.

ஆக்கியும், காத்தும், அருளால் அனைத்தையுமே
நோக்கி இளைப்பாறும், நுண்பொருளை ஓரேமோ ?

'இரவியும் ஆகாச பூமியும்...தூள் ஏற, வானவர்...ஈடேற' நேர்ந்தது.

ஈடு - சுய மதிப்பு; இதற்குமுன், இறங்குமுகம்; ஞான சக்தி தரிசனம் நேர்ந்த இன்றுமுதல், அது ஏறுமுகம் ஆயது.

அசுர சக்திக்கு, இன்றுவரை அஞ்சி அடங்கினோம். வாய்மை வேல் கனற்ற, இன்று வறண்டு விடுவோம் போலுள்ளதே! இது முறையோ என்று, குமைந்து ஏழ்கடலும் குமுறின.

நிலத்தின் நடுவிருந்து மண்ணுலகைத் தாங்கும் மேருமலை, வேலின் அதிர்ச்சி தாங்காது, நொடித்துப் பொடியாய் நொறுங்கியது.

'ஏழ்கடல்...இடர்பட, மாமேரு பூதரம் இடிபட'

(பூ - பூமியை; தரம் - தாங்குதல் எனும் பொருளில், பூதரம் என்பது, மலையை உணர்த்தியது.) ஆ! இவைகளை எண்ணும் போதே இதயம் அதிர்கிறதே!

பட்டப் பகலை இரவென்று உறங்கி, நள்ளிரவில் வாழ்க்கை நடத்துபவர், அறுபத்தாறு கோடி அசுரர்கள். நிசாசரர் எனப் பெறும் அவர்கள் கண்ணில் பகை; கருத்தில மிகை; எண்ணில் இடர்; எழுத்தில் கொலை. அவர்களால் அகில வுலகும் அவதியடைந்தன.

அப்பகைக் குணத்தை அடியோடு அழித்துவிடு என்று, ஏகவேக ஞானசத்தியை ஏவிய உம்மை, 'மாவேக நீடு அயில் விடுவோனே!' என்று, ஏத்திப் போற்றி இறைஞ்சுவம்.

இந்த ஆடல்களால், அதிகமாகச் செய்த வினைகளை அனுபவிக்க, இறப்பை பிறப்பை, மீண்டும் இயற்கையாக்கினை;

இரணிய கர்ப்பன் எனும் பெயருடன் பாரனைத்தையும் படைக்கும் நான்மறை ஓதும் நான்முகன்; பசுக்களைக் காக்கும் இடையர் தலைவரான பச்சை வண்ணப் பெருமாள்; இவ...

உயிருள் உயிராய் உயிர்க்கின்ற மெய்யன்,
தயிரிலுள நெய்போலத், தளதளஎன் றுள்ளனனே,

யாற்றும் தொழிலுடைய உக்கிர அக்கினி வண்ண உருத்திரர் எனும் முதலாளிகள் மூவருளர்; அவர்கள் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களை முறையே நடத்தி, இறுதியில் உமது திருவடி சம்பந்திகள் ஆதல் பொருட்டு, அன்றும் இன்றும் வழிபடுகின்றனர். அவர்கட்கு அருள, தாரக மயிலில் சேவை தரும் உம்மை, 'மயில் உறை வாழ்வே'! என்று மனனம் செய்கிறது எங்கள் மனம்.

தமக்கு மேல் ஒரு தலைவர் இலாதவர், விநாயகர்; மாபெரும் அவர் சொரூபமா யுளது ஒரு மலை. எவரும் எளிதில் சேவிக்க, அதன் மேல், ஞானசக்தியுடன் இருக்கும் உம்மை, 'விநாயக மலையுறை வேலா!' என்று விநயம் காட்டி விளிப்பம்-தரை, எப்பொருளையும் தாங்குகிறது; தாங்கும் நிலத்தை, நீர் தானே ஐயா தாங்குகிறீர்! அதனால்தான், மகீதரா என்கிறது எம் மனம். (*மகி - பூமி ; தரன் - தாங்குபவன்.*)

விஷஜந்துக்கள், விஷ விருட்சங்கள், பயங்கர விலங்குகள் முதலியன, எங்கும் காடுகளில் இருக்கின்றன. அவைகட்கு அஞ்சாது இருக்க, தோள் வலியும் துணைவலியும் தேவை. அவைகளை வேடர்கட்கு அருளி, வள்ளியார் திருநோக்கில், மேலும் அவர்களை வாழ வைத்தீர்; ஆதேயம் ஆன அவர்கட்கு நீர் ஆதாரம். அதனால் தான்,

'வனசரர் ஆதாரம் ஆகிய பெருமாளே' என்று, வீரிட்டுக் கூவி உம்மை விளிக்கின்றோம்.

(*ஆதேயம் - தாங்கப் படுபொருள்; ஆதாரம் - தாங்கும் பொருள். வனம் - வனப்புடைய காடு ; சரர் - சஞ்சரிப்பவர்.*)

"பிறவா திருக்க வரம்தரல் வேண்டும் ; பிறந்து விட்டால்
இறவா திருக்க மருந்துண்டுகாண் ; இது எப்படியோ ?
அறமார் புகழ்த்தில்லை அம்பல வாணர், அடிக்கமலம்
மறவா திரு மனமே! அதுகாண் நல் மருந்து உனக்கே !"

அவனிச்சை யின்றி, இலையும் அசையா ;
சிவசிவா என்றவனைச், சிந்தனைசெய் என்மனனே !

என்பது, உயர்ந்த ஞானிகளின் உபதேசம். மாதேவர் திருவடிகளை மறவாதிருப்பின், ஆகாமிய வினைகள் உருவாகா; பிராரத்துவ சாதனையான வேதனையை சகித்துக் கொள்வர்; இதன் மூலம், பெருமான் அருள் நோக்கம் பிறக்கும்; அதனால் சஞ்சித வினை சாம்பராம். இத்தகைய இறப்பு பிறப்பு இன்றி, உமது அடிநிழலில் இன்புற்று இருப்பர்; இந்த அருமை பெருமைகளை யறிந்து, உம்மை அர்ச்சிக்க மனம் ஆவலிக்கின்றது.

கன்மக் கரு; தந்தை கரு; தாய்க்கரு என, ஒவ்வொரு பிறப்பிலும், மூன்று கருச்சேற்றில் நாங்கள் முழுகியவர்கள். மூல வாசனை, குல வாசனை, காலவாசனையால், ஞான வாசனையின் நலம் உணரேம். அதுவன்றி, அடியேம் அங்கங்குப் பட்ட அவதிகட்கும் அளவில்லையே!

மங்களம், ஒளி, அறம், மறம் எனும் உத்தம நான்கிலிருந்து உதயமான உம்மை,

சரவண ஜாதா நமோ நம: என்று ஏத்தினால், இறவாத இன்ப நலம் எய்துமே!

சொல்லால் வரும் குற்றம்; சிந்தனையால் வரும் தோஷம்; பார்வையால் வரும் தீங்கு; இவ்வளவுதானா? கல்லாப் பிழை; உம் திருவடிகளைக் கருதாப்பிழை; நின் நாமங்களைச் சொல்லாப் பிழை; துதியாப் பிழை; தொழாப் பிழை; இப்படிப் பிழைமயம் ஆவது எம் பிறப்புநிலை. இவ்வளவையும் பொறுத்து, அருள் புரியும் உமது வளரும் அருட்கு வரம்பு இல்லை, ஆதலின்,

கருணை அதீதா நமோநம: என்று, உணர்ந்து போற்றி உய்வம் யாம்.

தனிச் சிறப்புடையது தாமரை; அவைகளுள் நூறு இதழ்களை யுடையது தெய்வ பங்கயம். பயனான உமது வனச பாதங்

விண் உடலில் காற்று, கனல், நீர், மண், விளங்குநிலம்,
எண்பயிர், அன்னத்தில், உயிரெழுதல் எண்ணீரோ ?

கள், அரிய அத் தெய்வக் கமலத்தின்மேல் அமர்ந்திருக்கின்றன.

"சரவணத்தின் - வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந் தருளினனே" என்று, இதைக் காந்தமும் இயம்புகின்றது. இவைகளை ஓதும்போதே, எம் இதய கமலம்; அதன் மேல் உமது திருவடிகள்; ஆஹா! இப்படி யல்லவா நினைவு எழுகிறது.

சததள பாதா நமோநம: அடடா! இப்படி ஓயாது உணர்ந்து ஓதுவதே உத்தமமான திருப்பணி.

அழகுமயம், என்றும் இளமை மயம், ஒளி மயம் ஆன உம்மை, அபிராமா! தருண! கதீரா நமோநம:

இப்படி எண்ணும் போதே, பெரும! எதிரில் நீர் இருப்பது போலத் தெரிகிறதே!

(அபிராமம் - தெய்வ அழகு; தருணம் - தெய்வ இளமை; கதிர்- தெய்வ சூரியஜோதி; கதிரா என்பது, ஓசை இன்பம் கருதி, 'கதீரா' என நீண்டது.)

வென்ற ஆயுதம் எதுவாயினும், அதை வேல் என்று சொல்; வென்றவர் எவராயினும், அவரை முருகன் என்று கூறு என்று, புறப்பொருள் இலக்கணம் புகல்கிறது. இதன் மூலம், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவன் நீ என்று, உணர்கிறது எம் உள்ளம். நிர் உபம வீரா நமோநம: என்று, போற்றி உம்மைப் புகழ்கின்றபோது, புளகிதம் அடைகிறது புந்தி.

மாயாபுரிப் பட்டணத்தை, ஆணவ மன்னன் ஆள்கின்றான். ஆத்ம குமாரனை, ஆசைக் கயிற்றால் கட்டி அடக்கி, காயாபுரிக் கோட்டையில் அவன் கடுஞ்சிறை யிட்டான். கண்ணன், காதன், மூக்கன், வாயன், தோலன் எனும் ஐவர், கோட்டையின் பயங்கரக் காவலர். அவர்களால், ஒன்றும் தோன்றாது உயங்கும் உயிர்க்கு இரங்கி, விடுதலை செய்!

இயற்கை இறையுருவை, காயத்ரி மூலம்
மயக்கமற எண்ணி, மகிழ்ஞானம் கொள்ளேமோ?

இன்றேல் கொடும்போர் என்று குரலெழுப்பி, வித்தக ஆன் மாக்களை விடுவிக்கும் உம்மை, சமதள ஊரா நமோநம: என்று, போற்றி உள்ளம் பூரிப்பம். (சம தளவூர் - திருப்போரூர்).

அகில உலக நாதர் நீர்; பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு நீர்; ஆதலின், ஜகதீசா! பரம சொரூபா நமோநம: என்று, தொழுது நின்று துதிப்பம் யாம்.

சுராபானம் செய்தவர் சுரர்; (சுரை - அமுதம்.) அந்த இமையவர் தலைவன் இந்திரன்; அப்படி எத்தனையோ இந்திரர் கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவர்க்கும் அதிபர் நீர்; சுரபதி பூபா நமோநம: என்று, அப்படிச் சொல்வதில்தான் எவ்வளவு சுவையுளது!

சிறந்த கடப்ப மலரில் சிவமணம்; 'உருள்பூம் தண்தார் புரளும் மார்பினன்' என்று, திருமுருகாற்றுப் படையும் அச் செய்தியைத் தெரிவிக்கின்றது. அது, சீவனின் பதி சிவம் என்பதை அறிவிக்கும் அடையாள மாலை. அவ்வுரிமை அறிந்து, 'பரிமள நீபா நமோநம: என்று பாடுகிறோம்.

அமைதியான கோலத்தில் உமை; ஆவேச கோலத்தில் காளி; (திரு, ஐஸ்வர்யம், புகழ், வீர்யம், ஞானம், வைராக்யம் எனும்) அறுகுணமான சிவந்த கோல அம்மை பகவதி. இந்த மும்மைத் தேவியர் மகவாகி, இம்மை வளம், மறுமை நலம், முத்திப் பயன் மூன்றும் அருளும் முதல்வா! உம்மை, 'உமை காளி பகவதி பாலா நமோநம' என்று ஓதி உவகை கொள்கிறோம்.

ஆண்மையும், ஆசாரமுமே அரிய உமது சொரூபம்; ஊன்றி அக்கோலத்தை உணர்ந்து, பவுரஷ சீலா நமோநம: என்று, துவாதச நாமம் கொண்டு துதிப்பம்; மற்று, (1) அபிராம, (2) தருண, (3) உமை பாலா, (4) காளி பாலா என இயைத்து, அற்புத சோடச நாமம் என்று

இதயக் குகையில் இருக்கும் ஒளியை,
நிதமும் உணர்ந்தே நிலையின்பம் எய்தேமோ?

அர்ச்சிப்பம்; அயில் விடுவோனே! மயில் உறை வாழ்வே! விநாயக மலை வேலா! மகீதரா! பெருமாளே! அரிய உம்மை, என்றும் இப்படி அர்ச்சித்துக் கொண்டே இருக்குமாறு அருள்புரி! என, விநயம் கொண்டு வீழ்ந்து வணங்கி விண்ணப்பித்தபடி.

ஓம்.

வாழ்க திருப்புகழ் வளம்.

அநுபூதி விளக்கம்

நவிலத் தகுமோ?

(கி. வா. ஜ.)

முருகனுடைய திருவருளால் இந்த உலகில் வாழும் போதே பேரின்ப அநுபவத்தைப் பெற்றவர் அருணகிரியார். 'எல்லாம் அற என்னை இழந்த நலம்' என்று அந்த இன்பப் பெருக்கை முன்பு குறிப்பித்தார். இப்போது அதை வேறு வகையில் சொல்ல வருகிறார்.

அது சொல்லுவதற்கு எளியதோ? அநுபவம் எதுவும் இன்னபடி இருந்ததென்று சொல்ல முடியாது. அது பேசா அநுபூதி.

"சொல்லுதற் கில்லையென் றெல்லாம் இழந்து
சும்மா இருக்கும் எல்லை"

என்று கந்தரலங்காரத்தில் சொல்வார். இந்தப் பேரின்ப அநுபவத்தில் மூழ்கிய மணிவாசகரும்,

"சொல்லுவ தறியேன் வாழி முறையோ!" என்று பாடுகிறார். அருணகிரியார் இங்கே, "நவிலத் தகுமோ" என்கிறார். இறைவனைப் பார்த்து இந்த அநுபவ அதிசய உணர்ச்சியிலே வெறிக் கூத்தாடிப் பேசுகிறார்.

சுயநலத்தை வீழ்த்தி, சுதந்தரமெய்ஞ் ஞான
மயமாகும் நாளை, மனம்கொள்ளல் என்றேயோ?

அவன் தன்னையே நுகரும்படி தந்திருக்கிறான். அவன் அமுத மயமானவன். தன்னை உண்டார்க்கு மரணமிலாப் பெரு வாழ்வைத் தருபவன். முருகனாகிய அமுது தேவாமிர்தத்தைப் போன்றதன்று. கடைந்த அந்த அமுது, தன்னை உண்ட தேவர்களுக்கு முழு ஆயுளைத் தந்ததேயன்றிச் சாவாமையைத் தரவில்லை. 'விண்ணோர் அமுதுண்டும் சாகிறார்கள்.' முருகனாகிய அமுதமோ என்றும் குறையாத இன்பத்தைத் தருவது. அது என்றும் மாறாமல் நிற்பது.

ஆறு அமுதே!

அநுபவத்தினால் அவனை அமுதமென்று உணர்ந்து கொண்டார் அருணகிரியார். அந்த அமுதம் முதலில் தன்னைக் காட்டிக் கொண்டு ஆட்கொள்ளா விட்டால் இந்த அநுபவம் கிட்டுமோ? மனமுடைய மக்களின் தியானப் பொருள் ஆவதற்காக அவன் திருவுருவம் எடுத்துக் கொண்டு வந்தான். ஞானசக்தியாகிய வேலைக் கையிலே ஏந்திக் காட்சி அளித்தான். அந்த அயில்வேல் அரசன்தான் இப்போது அத்துவித இன்பத்தைத்தந்து அமுதாக இருக்கிறான். ஆதலின் அவன் தமக்குக் காட்சியளித்த அந்தக் கோலத்தையும் சேர்த்து நினைக்கிறார்.

ஆறு அமுதே! அயில்வேல் அரசே!

அவன் உருவமுடையவனாகத் தோன்றினாலும், அந்த உருவத்திலும் நுட்பமான உண்மைகள் பொதிந்திருக்கும். அவன் ஞான சொரூபன்; ஞான பண்டிதசாமி; இதைக் காட்ட ஞானத்தையே வேலாக ஏந்தி நின்றான். ஞானததுக்கு இருப்பிடமாக இருப்பவன் அவன்.

ஞானாகரனே!

தன் திருவுருவத்தைக் காட்டி ஞானம் பெறச்செய்து, தன்னோடு ஒன்றும் இன்ப நிலையை அருளியவன் முருகன்.

பேதபுத்தி யென்கின்ற பேயை விரட்டி,மதி
ஏதமொன்றும் இன்றி, இருக்குநாள் என்றேயோ?

அத்தகையவன் தந்த இன்பத்தைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை எழுகிறது அருணகிரியாருக்கு. அதைச் சொல்ல முடியுமோ? 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்றல்லவா கூறுவார்கள்? ஆகவே,

நவிலத் தருமோ?

என்று சொல்லுகிருர்.

இறைவனுடைய திருவுருவத்தைத் தியானம் செய்து, அதனுல் அறியாமை நீங்கி மெய்யுணர்வு பெற்றவர்களுக்கு இறைவன் நெருங்கி வந்து தன்னைப் பருகும்படி அருள் செய்வான். அவன் ஆனந்தமே உருவாக இருப்பவன். அவனேடு இரண்டறக் கலந்து பரமசுகம் பெறும் நிலைபெற்றவர் அருணகிரியார்.

இந்த உடம்பு இறந்துபடுவது. இந்த வாழ்வு மண்ணுவது. இந்த உடம்பிலுள்ள பொறிகள் மனத்தைப் பல திசைகளிலும் ஓடச்செய்து அவாவை மிகுதியாக்குகின்றன. இத்தகைய துன்பத்துக்கு இடமான இந்த உடம்பிலுள்ள கருவி கரணங்களே இறைவனது அருள் பதிந்தால், அமுதம் உண்டது போன்ற இன்பத்தை அடையக் கருவியாகின்றன. அப்போது இந்த உடம்பு இருந்தும் இதனை மறந்து இன்பம் நுகரும் நிலைவந்து வாய்க்கிறது.

"என்னைமறந் திருந்தேன் இறந்தே விட்டது
இவ்வுடம்பே"

என்று அலங்காரத்தில் அருணகிரியார் கூறுவார். இந்த உடம்புக்குள் இருந்தும் இதனுல் ஒரு தடையும் நிகழாமல் இன்பத்தை நுகரும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கிறது.

அவர்களே உண்மையான அமுதபானம் உண்டவர்கள். அவர்கள் உண்ட அமுது,

போகமே யாகிப் பொசுங்காமல், யாக்கையினை
யோகமுகம் ஆக்குகின்ற யூகநிலை என்றுறுமோ?

"பத்தித் திருமுகம் ஆறுடன் பன்னிரு
தோள்களு மாய்த்
தித்தித் திருக்கும் அமுது."

பாலை அழகான புட்டியில் கொண்டு வரும்போது அந்தப் புட்டியில் அடையாளங்கள் இருப்பதைக் காண்கிறோம். பாலை உண்டபிறகு அந்த அடையாளம் மறந்து போகிறது. பாலே நம்மோடு கலந்து விடுகிறது.

இறைவன் அவ்வாறே நம்மில் கலந்து விடுகிறான். இந்த உடம்பில் வாழும் மட்டும் அப்படிக் கலந்து நிற்கிறான். இந்த உடம்பு கழிந்தவுடன் அவன் ஆருயிரைத் தன்னுள் கலக்கச் செய்து விடுகிறான்.

இங்கே அநுபவிக்கும் அநுபவத்தைச் சொல்ல எண்ணியும் முடியாமல் திணறுகிறார் அருணகிரியார்.

ஆறு அமுதே! அயில்வேல் அரசே!
ஞான கரனே! நவிலத் தகுமோ?

உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி)

பிரம்மலோகம் என்பது ஸ்வரூப நிலையிலிருந்து மாறுத நிலையாகும். இந்நிலையை அடைவது எளிதான காரியமல்ல. கர்மயோகங்களாலும் தியானங்களாலும் இந்நிலையை அடையும் ஜீவர்கள், பிரளய காலம்வரை வார்த்தைகளால் விவரிக்க முடியாத பேரின்பத்தில் திளைத்து, ஸ்ருஷ்டி தத்துவங்களெல்லாம் எந்த ஒரு பரம்பொருளிடத்து ஒன்று கின்றனவோ அந்தப் பரம்பொருளிடம் கலந்து பிறவா நிலை பெறுகின்றனர். இந்த பிரம்ம லோக அனுபவம் இருளில்

சித்தொளி பெண்ணுய்ச சிரிக்க, சிறந்தெழுந்த
சத்துத்தான் ஆணுயச், சகத்தில்வாழ் கின்றதுவே.

வைக்கப்பட்ட விளக்கைப் போல திவ்யமானது. எவ்வித சலனமும் மாற்றமும் அசைவும் இல்லாத நித்யானந்தம், கந்தானந்தம், அசலானந்தம் இன்னும் எந்த வார்த்தைகளைச் சொல்லுவது ? வெள்ளைச் சுவரில் எழுதிய கரிய எழுத்துக்கள் பளிச்சென்று தெரிவதுபோல இவ்வனுபவமும் 'கலப்படம் ஏதும் இல்லாத நிர்மல ஆனந்தமாகும். இவ்வாறு பிரம்ம லோகத்தில் ஜீவன் தங்கிப் பிரளய காலத்தில் பரம் பொருளுடன் ஒன்றுபடுவதை சுருதிகள் 'கிரம முக்தி' எனப் பகருகின்றன.

அடுத்து வரும் மந்திரத்தில் புலன்களுக்கும் ஆத்மாவுக்கும் உள்ள பேதம் சிந்திக்கப்படுகிறது. ஐம்புலன்களும் தனமாத்ரைகளைப் பஞ்சபூதங்களிடமிருந்து பெற்றுள்ளன. அவை சுதந்திரம் அற்றவை. அவை பூதங்களைச் சார்ந்துதான் நிற்க முடியும். ஆனால் ஆத்மாவோ சர்வ சுதந்திரமானது. சுயம்பிரகாசமானது. எதையும் சாராது, தன்னைச் சார்ந்த பிற பொருட்கள் தங்கும்படி ஏற்க வல்லது. புலன்கள் ஸ்வப்பன காலத்தில் அழிந்து போகின்றன. மீண்டும் ஜாக்ரத நிலை (விழிப்பு நிலை) அடையும்போதுதான் அவை தலை தூக்குகின்றன. இப்படி உறங்கினால் அழிந்தும், விழித்தால் எழுந்தும் வேலை செய்பவை புலன்கள். ஆனால் ஆத்மாவிற்கு இத்தகைய எழுகையும் வீழ்ச்சியும் ஒருபோதும் கிடையாது. அது எல்லா நிலைகளையும் கடந்து நின்று எதனாலும் கட்டுப்படாத ஒன்று. இந்த தத்துவங்களை அறியக் கூடிய தீரன் வருந்துவதில்லை. 'தீரோ ந ஶோசதி' என்று கூறப்படுகிறது. வாழ்வில் நாம் துயரடைவதன் காரணம் யாது என்று ஆராய்ந்தால், ஆணவத்தின் வசப்பட்டு மனத்தின ஆட்டத்திற்கும் இந்திரியங்களின் இழுப்பிற்கும் அடிமையாகிப் போனதுதான் என்பது நன்கு புலப்படும். எவனொருவன் தன் இந்திரியங்களின் வலிமையற்ற தோன்றி மாறும் நிலையை அறிகிறானோ அவன் இப்புலன்கள் தங்குவதற்கு

அன்பு கிளைத்து, அறிவு மலர்மணந்து,
இன்பக் கனிபழுத்தே, எற்குறுதல் என்றேயோ ?

ஆதாரமாக வுள்ள ஆத்மாவை நினைக்கத் தலைப்படுவான். ஆத்மாவின் தன்மையை அறிந்தவன் மாருத சுகத்தைப் பெறுகிருன். இன்ப துன்பங்களைக் கடந்து பரம சுகம் எனும் பெரும் பதவி அவனுக்குக் கிட்டுகிறது என்று சுருதித் தாய் வலியுறுத்திக் காட்டுகிருள். உபநிஷதங்கள் காட்டும் ஞான நெறியிலே செல்லும் மனிதனுக்கு மாருத சுகம் எனும் பதவி திண்ணமாக உண்டு என்பதை இம்மந்திரம் நிலைநாட்டுகிறதல்லவா !

இந்திரியங்களைக் காட்டிலும் ஆத்மா மேலானது என்பதைப் புத்தி பூர்வமாக நிர்ணயிக்கிருன் காலன். அடுத்து வரும் இரு மந்திரங்கள் செயல்பட மனம் ஒத்துழைக்க வேண்டி யிருக்கிறது. எனவே இந்திரியங்களைக் காட்டிலும் மனம் மேலானது. மனம் இந்திரியங்களின் வாயிலாக அனுபவங்களைப் புத்திக்கு அனுப்ப, புத்தி தனது முந்தைய அனுபவங்கள், அவற்ருல் ஏற்பட்ட பிரதி பலன்களை எண்ணிப் பார்த்து ஆராய்ந்து மனத்திற்குக் கட்டளையிட, மனம் இந்திரியங்களுக்குச சொல்ல இப்படிச் செயல்கள் நடக்கின்றன. இந்த விஷயத்தை நாம் எழுதுவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் கூட ஆவதில்லை; புத்தி தீர்ப்பு அளிக்க, இதுதான் ஓர் விந்தையான உண்மை. மனத்தின் அதிகாரி புத்தி. எனவே அது மனத்தைவிட மேலானது. இந்தப் புத்திக்கும் அப்பால் உள்ளது ஸமஷ்டி புத்தியின் படிவமான ஹிரண்ய கர்ப்பன். எல்லா ஜீவன்களின எண்ணங்களும் சிந்தனைகளும் இந்த ஸமஷ்டி தத்துவத்திலிருந்துதான் வெளிவருகிறது. எல்லோருக்கும் ஒரேமாதிரி சிந்தனைகள் ஒரே சமயத்தில் ஏற்படுவதின ரகசியம் இதுவே. இந்த "மஹத்" அல்லது இரண்ய கர்ப்பனை விட உயாந்தது அவ்யக்தமான வஸ்து. இதே கருத்தை, கதோப நிஷததில் முன்பே ஒரு முறை காலதேவன் கூறி யிருக்கிருன். (மூன்ருவது வல்லியின்

உலகமெலாம் தெய்வ ஒளியாகி நிறபக்,
கலகமனம் சாய்ந்(து)அடியேன் காண்பதுவும் ஆவதுவோ ?

10 வது மந்திரம்) அவ்யக்த்தத்தையும் கடந்து எங்கும் வியாபித்துள்ள குணம் குறியற்ற 'அலிங்கமான' தத்துவம் உள்ளது என்பது அடுத்த மந்திரக் கருத்தாகும். இந்தத் தத்துவமே ஆத்ம தத்துவமாகும். ஆத்மா நுண்ணிய பொருள்கள் யாவற்றிலும் நுண்ணியது. எனவே அது ஸர்வ வியாபகம் உடைய ஒரு தத்துவமாகத்தான் இருக்க வேண்டும். ஓரிடத்தில் புகை இருக்குமேயானல் அங்கு நெருப்பு இருக்கும் என்று அனுமானம் செய்து கொள்கிறோம். நமது சாஸ்திரங்களில் அனுமானம் செய்து கொண்டு மேலே போகவேண்டிய கட்டங்கள் பல இருக்கின்றன. மேகம் கூடுவது மழை பொழியப் போகிறது என்பதற்கு அறிகுறி என்று கூறுகிறோம். இப்படி நாம் காணுந ஒன்றினை அறிந்திட குறியாக இருப்பதை சாஸ்திரங்கள் லிங்கம் எனக் கூறுவதுண்டு. ஆனல் ஆத்மாவோ 'அலிங்கமானது' அதாவது குறியற்றது. நம்மிடத்தில் ஒன்றிய ஒனறைப் புறப்பொருள்களில் எப்படி உணரமுடியும்? தன்னில் தானுக இருக்கும் அந்தத் தத்துவத்தை அதுவாக இருந்து அனுபவிப்பவன் 'பிரம்ம வித்து' எனப் பேசப்படுகிறுன். 'பிரம்மவித் பிரம்மைவ பவதி' என்பது சுருதிகளின் பிரமாணமாகும். எல்லாவற்றிற்கும் அதிகாரமான, எல்லாவற்றையும் தாங்கும் ஆத்ம ஸ்வரூபத்தை எவன் ஒருவன் அறிகிருனே அவன் விடுதலை அல்லது முக்தியைப் பெறுகிறுன். அதோடு அழிவில்லாத அமர நிலையையும் எய்துகிறுன். 'யம் ஞாதவ முச்யதே ஜந்தூர் அம் குதத்வம் ச கச்சதி' என்று பேசுகிறுர் இவ்வுயர்ந்த உபநிஷத்தின் ஒப்பில்லாத ஆசாரியர்.

மனித சமுதாயம், இற்றைநிலை மாறி,
இனிய தெய்வச சார்புபெறல், என்றைக்குக் காண்பேமோ?

ஆநந்தோதயம்

(ரஸபதி)

கோபாலபுரம் என்று ஒரு பட்டினம். அவ்வூருள் இருந்தவர், அனைவரும் வைதிகர். அவர்களுள் ஒருவர் ஆநந்தர். அவர், ஓயாது அருள் நூற்களை ஓதினர். சிறக்கக் கற்றதைச் செயலிற் கொணர்ந்தார். ஒழுக்கத்தால் உயர்ந்த உத்தமர் என்று, போற்றி உலகம் அவரைப் புகழ்ந்தது.

அன்பு மிகுந்தவள். அறிவில் உயர்ந்தவள். கற்பன கற்றவள். அடக்கம் பொறுமை இரண்டும் அமைந்தவள். ஆண்டாள் எனும் பெயரினள். இவளே ஆநந்தர்க்குத் தக்க அணங்கு என்று, உரியவர் முயன்றனர். மங்கலப் பறைகள் முழங்கின, மாங்கல்ய தாரணம் நடந்தது.

உடலால் இருவர் ; உணர்வால் ஒருவர் எனுமாறு, பணிவு முகத்தால், ஆண்டாள் ஆநந்தரை ஆண்டாள். அகமும் புறமும ஒன்றும் அன்பு காட்டி, ஆநந்தர் ஆண்டாளை ஆநந்தியாக்கினர். இவர்களது இல்லறம் இனிது நிகழ்ந்தது.

சிவ பக்தியில் ஆநந்தர் சிறந்தவர் ; ஆண்டாளுக்கு, நாராயணர் மேல் அளவிறந்த அன்பு. வரவர இம்மனநிலை வளர்ந்தது. மனமொத்த தம்பதிகள், மதவிஷயததில் மட்டும் பெரிதும் மாறுபட்டனர். முன் பிறப்பின் வாசனை, பிறந்த குடும்ப வழக்கம், கற்ற கல்வியுமே இம் மாறுபாட்டிற்குக் காரணம். கருத்திற்கு இசைந்த விரதங்களை, இருவரும் கையாண்டனர். ஆண்டாள் விரதங்களை ஆநந்தர் மறுத்தார். அவர் விரதங்களை ஆண்டாள் வெறுத்தாள். மனத்துள் இருந்த புகைச்சல், பொங்கிச் சொற்கள் உருவில் பொருபொருத்தது.

அந்தணர்கள் பொன்னடியில், அன்புகொண்டு யான்பணிந்து
பந்த விகாரப் பண்பழிவ(து) என்றேயோ ?

திருமால் வழிபாட்டில், திருட்டுப் புத்திதான் உண்டாகும் என்றார் ஆநந்தர். உருத்திர பூமியில்தான், சிவவழிபாடு செய்யத் தகுவது ; இல்லறத்தில், அதற்கு இடமில்லை என்றாள் ஆண்டாள்.

வரவரத் தடித்து, வார்த்தைகள் வளர்ந்தன. இது என் வீடு. நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும் !

கேட்கிறேன். நான் சொல்வதையும் சிறிது கேளுங்கள் !

என்னடி கேட்பது ?

கோபிக்காதீர்கள் ! ஏற்றத் தாழ்வை எடுத்துக் காட்டி, என்னைத் திருப்திப் படுத்துங்கள் ! என் சொற்களில் நியாயம் இருந்தால், அதை அவசியம் ஏற்றுக் கொள்ளுங்கள் ! ஹரன் என்ற நாமமே எனக்கு, அச்சத்தையும் அருவருப்பையும் அளிக்கிறது. வற்புறுத்தி அம்மூர்த்தியை வழிபடு என்றால், என் மனம் அதிகம் நோகிறதே !

கடல் கடைந்த காலத்தில், விரிந்து உலகெலாம் வியாபித்த விடத்தை, கண்டம் கறுக்க உண்டவர் சிவபிரான். அந்த அருட்செயலை அமலர் செய்திலரேல், திருமால் போன்றவர் போன இடத்தில் புல் முளைத்துப் போயிருக்குமே ! என்று ஆநந்தர் உறுமினார்.

விடம் ஒரு பண்டம். அதைப் பரமசிவன் எனும் பாத்திரத்தில் வைத்து, கொண்டல் வண்ணர்தான் உண்டவர். அதுவன்றி, அண்ட சராசரங்களைத் திருமால் உண்டபோது, உங்கள் சிவனார் ஓடி ஒளிக்க ஏது இடம் ? ஆதி மாதவர் திருவயிற்றுள், அவரும் ஒருவர் ஆயினரே !

என்னையே தெய்வம் என்று கொள்ளுங்கள் என்று, உலகனைத்தையும் இரணியன் உலுக்கிய போது, எங்கே இருந்தார் உங்கள் இறைவர் ? கடனிற வண்ணர்தானே அவனையடக்கி உலகைக் காப்பாற்றினார்.

விழிப்பு, துயில், மறதி விட்டொழிந்து, மெய்அருளின்
விழிப்பின் அகப்பட்டு, விளங்குநாள் என்றுறுமோ ?

அடி அசடே ! கேள் !

நரனும் சிங்கமும் ஆயினர் நாரணர்; என்னடா இது ! இப்படியும் ஒரு தோற்றமா என்று இரணியன் ஏமாந்த சமயத்தில், அவனைத் திருமால் அழித்தார். கொப்புளித்த குருதியைக் குடித்தார். ஏறியது வெறி. அதனால் அகில உலகையும் அழிக்க முயன்றார்.

எங்கள் விமல சிவனார் வெளிப்பட்டார்; அவர்தம் கொட்டத்தை அடக்கினார் என்று, கொக்கரித்து ஆநந்தர் குதித்தார்.

இப்படியே வாத ப்ரதிவாதங்கள், காரசாரமாக வளர்ந்தன. பழைய புராணங்கள், கற்பனைக் கதைகள், யுக்தித் திறமைகள், இருவர் இடையிலும் உருண்டு புரண்டன.

ஆநந்தர் அமைதியை இழந்தார். பாவீ ! நீ செய்யும் பொல்லாத சிவ நிந்தையை, எவ்வளவுதான் பொறுப்பது ? என்று பொங்கினார்.

அகில சராசரத்தையும் காக்கும் எம்பெருமானை, அளவிலாது நிந்தித்தீர் ! பொல்லாத வசை கேட்ட என் உயிர், இன்னும் உடலைவிட்டுப் போகாது இருக்கிறதே என்று, அலறிக் குமுறினள் ஆண்டாள்.

என்னடி சாகஸமா செய்கிறாய்? பளார்! பளார்!! ஐயையோ என்ன இது ! உருண்டு புரண்டது ஆண்டாள் உடல்.

கோபத்தால் இரத்தக் கொதிப்பேறிய ஆநந்தரும், தன்னை மறந்தார். தரைமேல் வீழ்ந்தார். இருவர்க்கும் ஸ்மரணையில்லை. நெடுநேரம் இந்த நிலை.

அயர்ச்சியில் விளைந்தது அறிதுயில். ஜகன்மோகன வேணுகானம். ஆ ! எங்கிருந்து கேட்கிறது!

ஆம். ஆநந்தர் எதிரில் தான். வருந்தாதே ! வா : என்று ஒரு இனிய குரல். ஆநந்தர் திருமுன், கண்ணன் ஆநந்த நடனம் ஆடுகிறான்.

புலன்கள் மனத்தொடுங்கப், புந்தி உளத்தொடுங்கக்,
கலகநிலை யில்லா மவுனநிலை காணேமோ ?

அறிவிழந்து செயலிழந்த ஆண்டாள் உணர்வில், குனித்த புருவம். கொவ்வைச் செவ்வாய். பனித்த சடை. பவளம்போல் மேனி. பால் வெண்ணீறு. எடுத்த பொற்பாதம் கொண்டு இன்ப தாண்டவம் செய்கிறார் சிவபிரான். எல்லாம் ஒரு கண நேரந்தான். காட்சிகள் மறைந்தன. இருவரும் விழித்தனர். என்ன இது! இப்படியும் ஒரு சேவையா? உணர்ந்தனர். உள்ளம் குமைந்தது. உடல் வியர்த்தது. எழுந்தனர்.

ஆண்டாள் விரைந்தாள். ஆநந்தர் அடிகளில் வீழ்ந் தாள். ஏதோ ஒரு ஆவேசத்தால் குழறி வழிந்தேன். என்னை மன்னியுங்கள் என்று, கண்ணீரால் கொண்டவர் திருவடி களைக் குளிப்பாட்டினள்.

அடிக்கும் அளவு, அறிவிலாச் செயல் செய்தோம்! என்று எண்ணும் நேரத்தில், துணைவியின் கதறல் அவர் நெஞ்சைத் துளைத்தது. வாரி எடுத்தார்.

ஆண்டாள்! என்னிடத்திலும் குற்றம் இருக்கிறது. வாதம் வளர்ந்த போது, உன் அறிவுக் கூர்மையை உணர்ந்தேன். ஆத்திரத்தால் அறிவிழந்தேன். நீ வழிபடும் அந்த வரதர், வா! வா!! என்று, அயர்ந்திருந்த என் முன்வந்து ஆறுதல் செய் கிறார். நினைக்கிறேன்; என் நெஞ்சு நெகிழ்கிறது. ஆ! ஆ!!

என்ன சொல்கிறீர்கள்? தாங்கள் வழிபடும் சிவபெருமான், அமைதித் தாண்டவம் காட்டி, எளியேனை ஆறுதல் செய்வதை அனுபவித்தேன். வியப்பாயிருக்கிறதே!

ஆநந்தர் மனம் அதிர்ந்தது. எனக்குக் கிடைக்க வேண்டிய தரிசனம் அவட்கு. அவட்குக் கிடைக்க வேண்டிய சேவை எனக்குச் சித்திக்கிறது. சிவபுராணங்களில், சிவத் திற்குப் பரத்வம்; விஷ்ணு புராணங்களில், விஷ்ணுவே மெய்ப் பொருள். எது உண்மை தெரியவில்லையே! திருமாலை வழி

ஓதி உணர்ந்து, ஒன்றுவதே யோகமெனில்,
நீதி அதை மறந்தால், நிச்சயம்இன்(பு) இல்லையரோ.

பட்டார்க்குச் சிவதரிசனம். சிவத்தை ஆராதித்தார்க்குத் திருமால் சேவை. இதன் உள்ளுறையாக ஏதோ ஒன்று இருக்க வேண்டும் என்றார் ஆநந்தர்.

ஸ்வாமி! தெய்வ நுட்பத்தைத் தேராமல், வெறும் ஏட்டளவான கல்வி, வினைக்குத் தக்கபடி விபரீதத்தையே விளைவிக்கும். அனுபவத்தில், இதை ஓரளவு அறிகிறேன்.

ஆண்டாள்! கண்ணன் தரிசனம் கண்டபின், சிவத்தையும் திருமாலையும், மாறி மாறி நினைக்கிறது மனம்; சதா உண்பது. காகம் போல் ஓயாது கரைவது; கண்மூடும் வாழ்க்கை யிது மண்மூடிப் போவது; இவைகளை நினைத்தாலே நெஞ்சம் அதிர்கிறது. இதுதான் வாழ்க்கை யெனில், பொல்லாத இந்த ஜென்மத்தை, இறுதியில் சுட்டுப் பொசுக்கத்தான் வேண்டும். இறுதியில் உலகம் இதைத்தானே செய்கிறது. ஆன்மாவிற்கு வாழ்வை அளிக்க நினைத்து, காடுகளில், மலைகளில், மேலோர் பலர் கடுந்தவத்தைச் செய்கின்றார். சிறந்த அத் தவத்தை, நாமும் செய்வோமே; இதைவிட எதைச் சாதிக்கப் போகிறோம் என்ற சிந்தனை எழுகிறது.

அடியாள் நினைவே தங்கட்கும் உண்டாவதை, எண்ணி மகிழ்கிறது எனது இதயம். நல்ல யோசனை. தெய்வ ரகஸ்யத்தை, ஓரளவு தெரிந்து கொள்ள நினைக்கிறேன். தவந்தான் அதற்குத் தக்கவழி. நானும் வருகிறேன். இருவரும் முயல்வம் என்றாள் ஆண்டாள்.

புனித தம்பதிகள் புறப்பட்டனர். பாண்டி நாட்டில், சதுரகிரி என்று ஒரு இடம். அரிய பெரிய சித்தர்கள் யாவரும், அங்குதான் இருக்கின்றனர். சிறந்த அந்த இடத்தைச் சேர்ந்தனர். அமர்ந்தனர். எம்மான் சொரூபத்தைத் தெரிந்து கொள்ளும்வரை, இந்த இடத்தை விட்டு எழுந்திருப்பது இல்லை என்று, சங்கற்பம் செய்து கொண்டனர்.

பிறத்தல் இருத்தல் இறத்தல், பெருகும்
திறத்துக் கன்மத் திருவிளையாட் டாயதுவே!

உணவை மறந்தனர். உறக்கம் துறந்தனர். ஓம் நமசிவாய என்று, ஓயாது உருவேற்றினர் ஆநந்தர். ஓம் நமோ நாராயணுய என்று, இடையருது ஆண்டாள் ஏத்தி யிருந்தாள். பலநாள்கள் இடையில் பறந்தன.

ஒருநாள், எதிரில் பேரொளி எழுந்தது. அந்த ஒளிநடுவில், நதியும் மதியும் உலவு சடா மகுடம். அரவக் குழைகள் செவி களில் ஆடுகின்றன. திருநீறு சண்ணித்த திருமேனி. கொன்றை மாலை. மான்மழு. புலித்தோல் ஆடை. இடப்புறத் தில் எம்பெருமாட்டி. விடைமேல் பெருமான் விளங்குகிருர்.

அற்புதமான சேவை. ஆநந்தர் எழுந்தார். உள்ளம் மகிழ்ந்து துள்ளியது. வீழ்ந்து பணிந்து விநயம் காட்டிஞர். வேத அதீதா! நாத போதா! உமா சமேதா! என்று உருகிய உளமும், பெருகிய கண்ணீருமாக, இரு கரங்களையும் சிரத்தின் மேல் ஏற்றி யிருந்தார்.

பிரபோ! திருமாலே பரதெய்வம்; இப்படியும் கலைகளில் செய்திகள் இருக்கின்றன. இவைகளைப் படித்த இயல்பால், நிமல நின் சொரூபத்தை, குறையாக உலகம் கூறுகின்றதே! என் துணைவியும் அதே மனநிலையள். அவட்கு உமது சொரூ பத்தை அறிவித்தால் ஆகாதா? என்ருர்.

கலகல என்று நகைத்தார் கண்ணுதலார்.

ஆண்டாள்! என்னைப் பார்! ஏன் கண்களை மூடிக் கொள் கிருய்? என்ருர் சிவபிரான்.

நீலமேக சியாமள உருவை, நினைத்துப் பயின்றது என் நெஞ்சம். மறந்தும் பிற மூர்த்தங்களைத் தொழாத மங்கை நான்!

சிரித்தது மேலும் சிவம்; அதன்பின் அங்கிருந்து அகன்றது. அடுத்த கணத்தில், பளபளத்த திருமகுடம். மணி மகர குண்டலம். கஸ்தூரி திலகம். ஐம்படைத் திருக்கரம்.

தாக்கற்றுப் போக்கற்றுத் தானற்று நின்ருரை,
நோக்கும் திருவருள்; நோய்ப்பிறப்பும் நீங்குமரோ.

பீதாம்பர உடை. திருமார்பில் திருமகள். இங்ஙனம் திருமாலின் நிமல திருவுருவம், எதிரே நிற்கிறது.

அன்பின் உள்ளம் கொண்டவளே! என்னை நினைந்தது ஏன்? என்ற குரல் கேட்டுக் கண் திறந்தாள் ஆண்டாள். ஆநந்தாதிசயம் அதிகரித்தது. பயபக்தியுடன் பணிந்து எழுந்தாள். கரங்களைக் குவித்தாள். கலுழ்ந்தது கண்ணீர்.

பிரபோ! உம் அருமை யறியாமல், பரம்பொருள் சிவனே என்று, பிழைபட உணர்கிறார் என் பிராணபதி. உடலும் உயிரும் போன்ற வாழ்க்கையர் எங்கட்குள், இப்படி வேறுபாடு விளைவது தர்மம் அல்லவே!

புன்னகை செய்தார் புருடோத்தமர்.

ஆநந்த தம்பதிகளே! உங்களைப் போன்ற உத்தம அன்பர்களால், உண்மையை உலகம் உணர்ந்து கொள்கிறது. எவ்வுருவும் எம் உருவம். எப்பொருளும் எம் சொரூபம். மண்ணின் நுட்பத்தில், படைப்புக் கடவுளான பிரமன்; நீரின் நுட்பத்தில், திருமால். தீயின் நுட்பத்தில், உருத்திரன். காற்றின் நுட்பத்தில் மகேசன்; விண்ணின் நுட்பத்தில், சதாசிவம் ஆக யாம் விளங்குகிறோம்.

முதன்மை ஐம்பூத மூர்த்தங்களை, உணர்ந்து உளத்தால் உபாசிப்பவரை, அப் பூதங்கள் பந்தித்த தம் பந்திப்பை விட்டு விடும். வித்தக ஆன்மாக்கட்கு, விடுதலை அதனால் விளைகிறது.

ஆகமங்கள் அறிவிக்கும் அறுபத்து மூன்று மூர்த்தங்களுள் ஒன்று, கேசவார்த்தம் எனப் பெறும்; திருமாலைப் பாதியாகக் கொண்ட திருவுருவம் என்பது அதன் பொருள்.

விளைந்த பூததேக அபிமானம் விலகியபின், சிறந்த கேசவார்த்த சேவை சித்திக்கும். தெரிகிறதா?

இருவரும் எம்மைப் பாருங்கள் என்றான் பெருமான்.

உயிர்க்கவுறு காற்றை, உயிர்இயங்கத் தீயை,
பயிர்க்குரிய நீரதனைப் பாலித்தான் நம்பரனே.

அதே நேரத்தில், சங்கர நாராயண மூர்த்தம், நிமல புன்ன கையுடன் எதிரில் நிற்கிறது. கண்ட தம்பதிகள் களித்தனர். என்ன அதிசயம் இது என்று, வணங்கி நெஞ்சுருகி வாழ்த்தினர்.

கேளுங்கள் ! சங்கரன் என்பதற்குப் பல பொருள் உண்டு. அவைகளுள் ஒன்று மங்களம். விஷ்ணு என்பது, எங்கும் இருப்பவர் என்னும் பொருளது. வேண்டுவார் விரும்பும் திருவுருவில், விளங்குவம் யாம். சங்கரன் யாம் ; விஷ்ணுவும் யாம் ; இங்கே காணும் சங்கர நாராயணன் ஆவதும் யாம். எமக்கு அயலாக எம்மூர்த்தமும் இல்லை.

" கருது செம்பொன் அம்பலத்தினில் ஒரு கடவுள் நின்று நடிக்குமே "

" காவிரித் திரு நதியிலே ஒரு கருணை மாமுகில் துயிலுமே."

என்று, அனுபவிகள் அறிந்து பாடி ஆநந்திப்பர்.

அரிய இந்நுட்பம் அறிந்தவர், அமைதியை வாழ்க்கையில் அடைவர். வேற்றுமை கொண்டவர் வேதனை எய்துவர்.

தண்மை, வெம்மை என்பவை, ஒரு பொருளின் இரு புறங்கள். தட்ப சொரூபம் திருமால் உருவம் ; அதற்கு ஏற்ப, அவர் சந்நிதியில், தீர்த்தப் பிரசாதம் தினமும் கிடைக்கும்; அதிக தட்பம் ஆகாதபடி, தனியே துளசி தளமும் தரப்பெறும்.

வெப்ப சொரூபம் சிவம் ; அதற்கு ஏற்ப, அச்சந்நிதியில் வெந்த நீறுதான் பிரசாதம் ; அதிக வெப்பம் ஆகாதபடி, அங்கு தனிப்பெரும் வில்வமும் தரப்பெறும்.

வானத்தில், கடலில், மலைகளில், மரங்களில், செடிகளில் கொடிகளில், பசுமை நிறம் படர்ந்துளது. அந்நிறத்தில் திருமால் சொரூபம் திமிதமிடும்.

அக்கினியில், சூரியனில், சிவரூபம் சிந்தனைக்கு விருந்தாகிச் சிறந்துளது.

ஒன்றினின் ஞென்றுதித்தே ஒன்று பலவாகி,
நின்றிடச்செய் தெய்வ நியதிபெரும் அற்புதமே !

உயர்ந்த யோக நுட்பத்தை உணர்த்த, திருவரங்கத்தில் யாம் ரங்கராஜர் என்று திகழ்கிறோம்.

உணர்வில் உறவு பூண்டு, அமைதி யின்பத்தை உயிர்கட்கு அளிக்க, ஆநந்த நடராஜா ஆகி, அரிய தில்லை யம்பலத்தில் ஆடுகிறோம்.

ஏக காலத்தில், யோகம் ஞானம் இரண்டையும் உதவ, தில்லையில் கோவிந்த ராஜா, நடராஜா எனும் இருபேர் உருவில், எதிரும் புதிருமாக இருக்கின்றோம்

மார்கழியில் ஒரு திதி; ஒரு நட்சத்திரத்திற்கு மகிமை அளிப்பம். அம்மாத ஏகாதசித் திதியில், அரிய நுட்பம் பல அறிவிக்க, திருவரங்கத்தில் திருவிழாக் கொள்வம். அதே மாதத் திருவாதிரை நட்சத்திரத்தில், ஆருத்ரா எனும் பெயரிட்டு, ஐந்தொழில் நுட்பத்தை அறிவிப்பம்.

ஊன்றி எம் திருவருள் நுட்பத்தை உணராமல், புனித சமய வாழ்வை ஒரு பொழுது போக்காக வைத்து, எம்மை நேரே கண்டவர் போல், கற்பனை வரலாறுகள் பலவற்றைக் கலக நடையில் உருவாக்கி, ஆகாமிய வினைகளைப் பெருக்கி, அவதி யடைகின்றார் ஆன்மாக்கள்.

கற்பது. யுக்திகள் பலவற்றைக் கலப்பது. முகம் காட்டி மேடையில் முழக்குவது. பேத இங்கிலையில், ஆஸ்திகம் பிந்துகிறது; மோசமான அறிவுதான் முந்துகிறது. "அவரவர் விதி வழி அடைய நின்றனர்" பலர்.

அருமை விக்ரகத்தை ஆராதிக்கும்போது, எம் அணுக்கம் ஆகிறது ஆக்கை; பக்தியோடு எம் புகழைப் பாடுதல், உயர்ந்த மந்திரங்களை உருவேற்றுதல் மூலம், அரிய சொருபத்தில் அணுக்கம் ஆகிறது வாக்கு. தியானித்தலில், சிவன் சீவன் எனும் பேதநிலை நீங்கி, அபேத நிலை சித்தத்தில் அமைகிறது.

கடலாய், மலையாய், காசினியாய் நின்றான்;
உடலாய், உயிராய் உறையுமுள(வு) என்னேயோ!

உடனுதல் எனும் உண்மை அனுபூதி, அங்கே உருவாகின்றது. ஆஸ்திக இந்நுட்பத்தை அறியாமல், நாத்தழும்பேற நாலாயிரம் பேசல், நலமன்று என்றான் எம்பிரான்.

ஓம் ஓம் நாதம், அதே நேரத்தில் உலகம் முழுதும் ஒலித்தது. எங்கும் பேரொளி எழுந்தது. அவ் வொளிவெள்ளம் புனித சங்கர நாரயணரைப் போர்த்தது. அவ்வொளி வரவர அடங்கி, அதன் நடு இருந்த திருவுருவம், இரட்டை இலிங்க உருவம் எய்தியது. மகிமை யுடைய பெயர் மகாதேவர்.

இந்த அற்புதம் கண்ட ஆநந்த தம்பதிகள், அதிசயம் எய்தினர். அத் தெய்வத் திருவுருவை, விழுந்து வணங்கினர். அங்கேயே தங்கினர். அம்மூர்த்தத்தை, பலகாலம் வாக்குமனம் காயத்தால் வழிபட்டனர். அதன் பயனாக, ஒரு நாள், அந்த இலிங்கத்தில் இருந்து எழுந்த சோதியில், ஆநந்த தம்பதிகளின் ஆத்மாக்கள், இரண்டறக் கலந்து இன்பம் கொண்டன.

ஓம்.

வாழ்க அடியவர்!

பள்ளி எழுந்தருளாயே!

(வேலூர். மு. பெருமாள்.)

எனக்கென்னவோ நம் நாட்டுச் சமயப் பழக்க வழக்கங்களைக் கண்டாலும், கேட்டாலும் பிடிக்கவில்லை. முட்டாள் தனத்துக்கும் ஒரு எல்லை வேண்டாமா? என்மனம் வேதனைப் படுகினறது சங்கரா! என்று, மாதவன் தன் நண்பரிடம் கூறினான்.

என்ன மாதவா! உனக்கு இத்துணை மனவேதனை?

மற்ற நாடுகளெல்லாம் விஞ்ஞான வளர்ச்சியில் போட்டி யிட்டுக் கொண்டு, உலகப் புகழின உச்ச நிலையை எட்டிப் பிடித்து முன்னேறுகின்றன. ஆயின் நம் நாட்டினர் மெய்ஞ்

புறம்போம் மனத்தால், பொல்லாத வேற்றுமையாம்;
திறமாம் அகமனத்தால், தேரவரும் ஒற்றுமையே.

ஞான மென்றும், கோயில், குளம், சமயம், சாத்திரம் என்ற பின்னணியை வழி வழியாக வளர்த்து வருகின்றனர். மக்களுடைய அறிவு வளர்ச்சி இதனால் முடங்கிக் கிடக்கின்றன.

அன்பரே! தாங்கள் அறிவிக்கும் அயல் நாடுகளெல்லாம் விஞ்ஞான வளர்ச்சியின் பயனை, உலகமக்களின் அழிவுக்குப் பயன்படத் திட்டமிட்டு, அழிவுப் பாதையின் எல்லையில் நின்றுகொண்டு திணறுகின்றனர் என்பது உலகமறிந்த உண்மையாகும். உலக ஆதிக்கப் போட்டிக்கு ஒவ்வொரு நாடும் விஞ்ஞான வளர்ச்சியை உபயோகிக்க முனைகின்றதே! இதுவா முன்னேற்றம்? புகழா இது? பண்டைக்கால நம் பாரதநாட்டுப் போர் முறைகளிலும், அறமும் நீதியும் பண்பாடாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. ஆயின் இன்று அயல் நாட்டு விஞ்ஞான வளர்ச்சியின் போரினால், அறமும், நீதியும் அடியுடன் புறக்கணிக்கப் படுகின்றனவே! அன்றும் இன்றும், என்றும் நம் நாட்டில் நல்லறப் பண்புகள நிலை பெற்று வளர்ந்து வருவதற்கு அடிப்படை, நம் மக்களிடையே சமயநெறிப் பழக்கங்கள் வழிவழியாக வளர்ந்து வருகின்றதால்தான் என்றனன் சங்கரன்.

சங்கரா! சமயப் பழக்க வழக்கங்கட்காகப் பட்டதாரியான நீங்களா பரிந்து பேசுவது? உங்களை ஒன்று கேட்கின்றேன். அதாவது ஆண்டவன் அங்கிங் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, போக்கும், வரவும், பிறப்பும், இறப்பும், உறக்கமும், விழிப்புமற்ற வியாபகரா யிற்றே! அவரை மார்கழி மாதத்தில், பல்லோரும் பள்ளி யெழுந்தருளாயே என்று பாடி எழுப்புகின்றனரே! இது மகா விந்தையாக இல்லையா? பகவானுக்கும் பள்ளி யெழுச்சி வேண்டுமா என்ன?

அன்பரே! எல்லாம் வல்ல இறைவர் எப்போதும் உறக்கமும், விழிப்புமற்றவர்தான். அவரை அனவரதமும் ஆழ்ந்த உறக்கத்தில் மயக்கங் கொண்ட மக்களாகிய நாமா அதிகாலையில் எழுந்திருக்குமாறு திருப்பள்ளி எழுப்புவது? நம் பெரியோர்கள் வகுத்த கருத்து இதுவன்று. ஒரு பெரிய

எங்கும் பரவி, எதையும் அறிகின்ற
கங்குல்பகல் காணாத காட்சியனைக் காணேமோ?

நாட்டை ஆளும் அரசனைக் காணும்போது ஒரே ஒரு எலுமிச்சம் பழம் கொடுத்துக் காண்பது, அவருக்கு எலுமிச்சம்பழம் தேவைக்காகவா? மரியாதைக்கன்றோ! அதுபோன்று மார்கழி மாதப் புண்ணிய நாளில் அதிகாலையில் ஆண்டவனை வழிபட வேண்டிய நேரம். அன்பும், பணிவும் அடங்கிய உபசாரத் துக்காக, வகுத்த வழிபாட்டு முறையாகும் திருப்பள்ளி யெழுச்சி.

தங்கள் கவிதைத் திறனைக் காட்ட மாணிக்க வாசகருக்கும், ஆண்டாள் எம்மையாருக்கும் உலகில் வேறு பொருள்கள் இல்லையா? திருப்பள்ளி யெழுச்சியில்தானா திறனைக் காட்ட வேண்டும்! திருப்பள்ளி எழுச்சியின் கருத்துகளெல்லாம் வெறுங் கற்பனையாகும் என்பது என் கருத்து.

கலையறிஞர்களின் கருத்திலிருந்து உருவாகும் கவிதை கள், உலகில் நிகழும் நிகழ்ச்சிகளை உருவகப்படுத்தும் ஓவிய மாகும். கற்பனைகள் போன்று காணப்படினும், மெய்யறி வுள்ள மேதைகளின் கவிதை வாக்குகளை மெய்ப்பிக்கும் பல நிகழ்ச்சிகள், கண்ணால் இன்றும் காண முடிகின்றன. அழியும் உலக நிகழ்ச்சிகளைக் குறித்து அருங்கவிதைகள் ஆக்குவதைவிட, அழியாத ஆண்டவன் புகழினை, அவருடைய அருளை வாழ்த்தி அருட்கவிதைகள் ஆக்குவது தானே அறிவுடைமையின் அருங்கடனாகும்.

சரி இதை இத்துடன் முடித்துக் கொள்வோம். சங்கரா! நாளை நான் ஒரு வேலையாகச் சிதம்பரம் செல்லவேண்டும். தாங்களும் உடன் வரலாமா?

நானும் நாளை மறுதினம் சிதம்பரம் ஆருத்திரா தெரிச னத்துக்காகச் செல்ல எண்ணம். இருவரும் நாளையே புறப் படலாம். மறுநாள் இருவரும் மாலையில் சிதம்பரம் சேர்ந்தனர்.

அதிகாலை ஐந்து மணிக்கு மாதவனுடன் சங்கரன், தில்லை யம்பல வாணர் திருக்கோயிலில் நின்று சேவிக்கலானான். கூட்டம் மிகவும் அதிகம். சங்கரன் மாதவனை அங்குக் கூர்ந்து கவனிக்க வைத்தான்.

ஒடுங்கும் மனத்தால் ஒருமை விளையும்;
நடுங்கும் விவகாரம், நாமடைய மாட்டோமே!

ஒருபக்கம் வீணை நாதத்துடன் இனிய கீதங்களைப் பாடி, கேட்போர் மனதை எம்பெருமான் நடராஜர் பக்தியில் ஈடு படும்படியான இன்னிசைக் கச்சேரிகள் நிகழ்கின்றன.

மறுபக்கம், சிவாகம வேத விற்பன்னர்கள் ஆகம முறைப்படி அணியணியாக அமர்ந்து வடமொழி வேத பாரா யணம் புரிகின்றனர்.

ஒருபக்கம், தேவாரத் திருமுறைகளை ஓதுவார்கள், கேட்போர் மனமுருகவும் ஆனந்தக் கண்ணீர் வடியவும் ஓதிக்கொண் டிருந்தனர்.

மறுபக்கம், அடியார்கள் பலர் அன்பு மேலீட்டால் ஆண்டவனை அர்ச்சிக்கவும், சூட்டவும் நறுமணங்கமழும் மலர்களையும், மாலைகளையும், நிவேதன பழவர்க்கங்களையும் கரத்தி லேந்தியவண்ணம் சந்நிதியின் முன்னர் காத்து நிற்கின்றனர்.

ஒருபக்கம், பல பெருமக்கள் எல்லையில்லா இன்ப வடி வினரான தில்லைத் திருநட நாயகனார் திருவடியைக் கண்டு, தோத்திரங்கள் கூறியவண்ணம் தொழுது நின்றனர்.

மறுபக்கம்; எம்பெருமானே! என்ன புண்ணியம் செய்தேமோ! இப்புனித நாளில் இங்குற்று உம்மைக் கண்டு தொழ மனிதப் பிறவியை எங்கட்கு அளித்த உமது ஒப்பற்ற உயர்கருணையை உன்னுந்தோறும் உள்ளமெல்லாம் கரை கின்றது. வேறு பிறவிகளை வழங்கி யிருப்பின் இங்குற்று உம்மை வணங்க முடியாதே! எனக் கண்ணீர் வடித்த வண்ண மாகப் பலபக்தர்கள் நின்று கொண்டிருந்தனர்.

ஒருபக்கம்; ஆனந்தக் கூத்தனே! அம்பலவா! ஆனந் தத் தாண்டவத்தால் அகில உயிர்களையும் அசைவிக்கின்றனை. நீ ஆடவில்லை யெனின், ஆருயிர்களாகிய எங்கள் ஆட்ட மெல்லாம் அடங்கி ஒடுங்கிவிடும். வாழ வைக்கும் தெய்வமே! எங்களை வணங்க வைத்த உம் வான்கருணை வாழி! வாழி! என்று சில அன்பர்கள், ஆடிப்பாடி அன்பு மேலீட்டால் அயர்ந்து சோருகின்றனர்.

கவலைப் புயலால், வாழ்க்கை எனும் கப்பல்
அவலம் அடைதல், அறிந்துமறந் திட்டோமே.

மறுபக்கம், நடன சபாபதிப் பெருமானே! மானிலத்துள் மற்ற உயிர்கட்கு வழங்காத நீண்ட இருகரங்களை மக்களாகிய எங்கட்கு அளித்துள்ளனே. கரங்களளித்த கடவுளே! உம்மைக் கைகூப்பி வணங்க வேண்டாமா? இப்பேறு எமக்களித்த இறைவா! இதோ இரு கரங்களும் கூப்பி வணங்குகின்றேம் என்று உள்ளங் கரைந்து, உரை தடுமாறி, கண்களை மூடிக் கண்ணுதல் பெருமான் கழலடியைக் கருத்தில் நிறுத்தியவர்களாகச் சிரத்துக்குமேல் இரு கரங்களையும் குவித்து வணங்கி நிற்கின்றனர்.

ஒருபக்கம், திருப்பெருந்துறையினில் கோயில் கொண்ட தேவ தேவா! மகாதேவா! மண்ணுலக வாழ்வில் மயங்கிக் கிடக்கும் எங்களை மாபெருங் கருணையினுல் ஆட்கொள்வான் வேண்டி, இத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளி எழிலான காட்சி வழங்கும் எம்பெருமானே! என்னே உம் திருவருள் மாட்சி! என்சொல்லி ஏத்துவோம்! போற்றுவோம்! எனப் பல பக்தர்கள் பரவசப்பட்டு நிற்கின்றனர்.

இங்ஙனம் தில்லைத் திருக்கோயிலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் எம்பெருமான் தெரிசனத்தின் பொருட்டுத் திரண்டு, பக்தி மிகுதியால் பாடுவதும், ஆடுவதும், இன்னிசை முழக்கம் செய்வதும், வேத சாத்திர தோத்திரங்கள் புரிவதுமாக, தம்மை மறந்து தலைவன் திருவருளில் திளைத்து நின்றனர். ஆலய மணியோசைகள், நாதசுர நல்லிசைகள் சூழ, தூப, தீப, கற்பூர ஆராதனைகள் நிகழ்கின்றன. அதுசமயம் எம்பெருமான் சந்நிதியின் முன்னுல் திருமுறை ஓதுவார் திருப்பள்ளி யெழுச்சியை முன்னிட்டுப் பின்வரும் பாடலை உருக்கமாக ஓதினுர்.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே!

என்ற மணிவாசகப் பெருமாள் திருப்பள்ளி யெழுச்சிப் பாடலைக் கேட்ட சங்கரன், தமது நண்பரான மாதவனை நோக்கிக், கவனித்தீர்களா பாடலின் கருத்தை! பல்நூற்றாண்டுகட்கு முன்னர் வாதவூர் வள்ளல் பெருமான் மணிவாசகர் உள்ளத்தில் எழுந்த கவிதை யூற்றை! மேலேகாணும் பாடலின் உரையை இன்று இப்போது நாம் காட்சியாகக் காண்கின்றோமா யில்லையா? கற்பனைப் பாடல்கள் என்கிறீர்களே! என்றோ பாடிய பாடல்களுக்கு நாம் இன்றும் உரைகாண இங்கு முடிகின்றதே! பெரியோர் வாக்கு பொய்க்குமா என்றார்.

உண்மையை உணர்ந்தேன். அனுபவத்தில் அறிந்தேன். *பாரத நாட்டின், குறிப்பாகத் தென்னாட்டின் சமயவளர்ச்சிகள்* மக்கள் பண்பாட்டை வளர்க்கும் மகிமை மிக்கதாகும் என்பதில் ஐயமில்லை. மார்கழிப் பாராயணம் என்றும் நின்று நிலவுக. வேலும் மயிலும் துணைபுரிக!

OUR STRENGTH

Vedas declare that righteousness is strength unconquerable. Light dispels darkness. The mythology and the ancient experience of historic India declare with one voice, the destruction of all evil forces which threaten the well-being of the world. The advent of Krithikai heralds the inflow of the mighty power of Divine effulgence in the physical and metaphysical world, and the Annamalai Deepam festival is the eternal mentor that assures mankind of its safety and invulnerable divine might that strikes down the iniquities of mortal man wherever he seeks by his cruelty and deceit to disturb the welfare and peace of a righteous world. The feast at the Hill of Heavenly Light at Tiruvannamalai is an annual reminder of the divine declaration that the Lord is the insurer

of safety and success for the righteous against all demoniacal outrages. The Indian humanity instilled with faith and devotion, is now turned to the Lord of the universe in prayers for divine intercession in the present crisis. The Lord's will is plainly manifest from how the temples of the land have been moved to supply to their best the sinews of war against the enemy of world-welfare. Arjuna wondered how he at all was able to defeat Drona the great archer in the Mahabharatha war and to undo him. The great sage who was called to explain gave the gripping reply "What is it? Arjuna fought with Lord Krishna in front of him, in His full blessing. The unconquerable Drona had not a Krishna to drive his chariot, not even his blessing." The war of India against Chinese aggression is fought with the participation and blessings and war aid from all the temples in India. The prayers of the devotees countless, are forging unconquerable missiles and strength not unstandable to *asuraic* elements. The world's strength and co-operation that India has secured is based first on the inequity, ruthlessness and deceit of the aggressor and secondly on the incontrovertible fact that the fight of India, is a fight for peace and world-welfare. Let all who are disabled from making direct contributions to the war, offer their heartfelt prayers as they are now doing, and we all can be sure that success has always been with *Satyam*, Love and Justice. So may the Lord help. [*Thiruppugal Mani*

467

நீராய் நிலனாய்த், தீயாய்க் காலாய், நெடுவானாய்,
சீரார் சுடர்கள் இரண்டாய்ச், சிவனாய், அயன் ஆனாய்;
கூராழி வெண்சங்கு ஏந்திக், கொடியேன்பால்
வாராய் ஒருநாள், மண்ணும் விண்ணும் மகிழவே.

—நம்மாழ்வார்.

(கால் - காற்று. வான் - ஆகாயம். சுடர்கள் - சூரிய சந்திரர்கள். ஆழி - சக்கரம்).

No 1506 அசோகா ASOKA நெ.1506